ISSN - 2279 - 1868
9772279186008

போர் வெறியோடு புறப்பட்டவனை
தர்ம நெறி நிற்கப் பணித்த தேசம்

கலிங்கம்

பல்சுவை இருமாத இதழ்

போர்-01 பரணி - 04

பெப்ரவரி, மார்ச் 2013

மறைக்கப்பட்ட வரலாறு

Price
14.31
கோடி

பல்கலைக்கழகக் கல்வி பகற் கனவா?

தாத்தரி குட்டியும் ஸ்மார்த்த விசாரமும்

- நூற்றாண்டைக் கடந்த உருக்கும் உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANDRA PRINTERS

ஓவ்செற் பிறிண்டிங்

அழகிய வடிவமைப்புக்களுடன் கூடிய

- புத்தகங்கள்
- துண்டுப் பிரசுரங்கள்
- போஸ்ரர்கள்

மற்றும் சகலவிதமான அச்சுவேலைகள்

மாபிள் பிறிண்டிங்

ரீ சேர்ட் பிறிண்டிங்

மற்றும் திருமண அழைப்பிதழ்கள், உயர்தரத்திலான டிஜிற்றல் பிறிண்டிங்

#379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)

021 2228929 / 077 7481696

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்திடாத வீரம்
மண்டியிடாத மானம்

கலிங்கம்

பெப்ரவரி– மார்ச், 2013

போர் – 01 பரணி – 04

323, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி - 021 222 0321 kalingaminfo@gmail.com
தொலைநகல் - 021 222 0321 Cell: 0772297265

ஆசிரியர் குழு –

திரு.செ.கமலக்கண்ணன்
திருமதி.ர.தர்மினி
திரு.வ.பார்த்திபன்

ஆலோசகர் –

திரு.தி.நடனசபேசன்

அலுவலக உதவி –

செல்வி.ச.தவரூபா
செல்வி.ஜே.அகிலா

ஒவியக்கலை –

திருமதி.எஸ்.மேரிடியூலா
திரு.எஸ்.சந்திரசேகர்

இதழழகு –

தாயகம் டிஜிற்றல்,
பரமேஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்

மேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே

விளம்பரங்களுக்கு

கலிங்கம், #323, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
யாழ்.ஏர்ட், #38, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
☎ 0094 21 321 4691

சந்தா தொடர்பான விபரங்கள்

(ஓர் ஆண்டுக்குரியது, தபால் செலவு உட்பட)

இலங்கை	600 ரூபா
இந்தியா	750 ரூபா
கனடா	45 கனடியன் டொலர்
இங்கிலாந்து	35 பவுண்ஸ்
ஆவுஸ்ரேலியா	45 அவுஸ்ரேலிய டொலர்
ஐரோப்பா	40 யூரோ
ஏனையவை	45 டொலர்

கலிர்கத்தில்...

விடை கிடைக்காத மர்மங்கள் பக்கம் 04

சீற்றங்களுக்கு அடிபணியாத சீனப்பெருஞ்சுவர் பக்கம் 20

2050 ஆம் ஆண்டை நோக்கிய விவசாயம் பக்கம் 40

அழகு சாம்ராச்சியம் கிளியோபாட்ரா பக்கம் 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம் கொடுக்க அழைக்கின்றோம்

மீண்டும் ஒரு பரணியில் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றோம். இம்முறை கலிங்கம் பரணி 4 வெளிவரச் சற்று காலம் தாழ்த்தி விட்டது மன்னித்துக் கொள்ள வேண்டும். ஆனால் எமது தாமதம் கலிங்கம் வாசகர்களிடம் பெற்றிருக்கின்ற அபிமானத்தை எமக்கு உணர்த்தி விட்டது. ஏன் எனில் பல வாசகர்கள் நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் ஏன் கலிங்கம் இன்னும் வரவில்லை ? வெளிவரமாட்டாதா? எப்ப வரும்? என எம்மைக் கேட்டுக் கொண்டனர். இவ்வாறான வாசகர்கள் எமக்குண்டு என்பது எம்மை மகிழ்ச்சி கொள்ள வைக்கின்றது. ஆனாலும் தற்போது தமிழர் பிரதேசங்களில் வாசிப்போரின் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதும் புத்தகங்கள் என்றால் ஏதோ தீண்டத் தகாத பொருள் என நினைக்கின்ற மனப்பாங்கு கூடிக் கொண்டு செல்வதும் மறுபுறம் எம்மை கவலை கொள்ள வைக்கின்றது. சில உயர் பதவிகளில் இருக்கும் சமூகப் பொறுப்பானவர்கள் கூட இப்ப யார் புத்தகங்களை வாசிக்கின்றார்கள் ஏன் வீணாக புத்தகங்களை வெளியிடுகின்றீர்கள்? என சர்வ சாதாரணமாக கேட்பதும் வழமை யாகி விட்டது. இது எமக்கு மட்டும் இல்லை ஒட்டு மொத்த தமிழ் இனத்திற்கே ஏற்பட்டிருக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலையாகவே கருதவேண்டியிருக்கின்றது.

கலை, பண்பாடு கல்வி, வீரம் போன்றவற்றால் இந்த உலகப்பந்தில் உயரிய இடத்தைப் போராடிப் பெற்றுக்கொண்ட எமது இனத்தை நாமே அழிப்பதற்கு ஏற்படுத்திக்கொள்ளும் வழிமுறைகளில் ஒன்றாகவே மேற்கூறிய விடயத்தையும் பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் ஒரு இனத்தை அழிக்கவேண்டும் என்றால் முதலில் மொழியையும் அம் மொழி சார்ந்து எழுந்த இலக்கியங்களையும் அழிக்க வேண்டும். அதன் பின்னர் அவ்வினம் தானாகவே அழிந்து விடும் என்பார்கள். அந்த வகையில் புகழ்பூத்த மாயன் நாகரீகத்திற்கு நடந்ததையும் அறிந்து இருப்பீர்கள். எத்தனையோ தடைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் மத்தியில் தனது சுயமரியா தையை இழக்காத எமது இனத்தின் தனித்துவத்தை நிலைநாட்ட எமது மொழி சார்ந்த கலை பண்பாடுகளையும் அது சார்ந்து எழுந்த இலக்கியங்களை காக்க வேண்டியதும் புதிதாக எழும் இலக்கியங்களுக்கு முழுமையான ஆதரவு கொடுப்பதோடு மாத்திரமில்லாது அவற்றை முழுமையாக வாசித்து முழு மனிதர்க ளாக மாற வேண்டியதும் எமது தார்மீகக் கடமை

எனவே இணையத்தில் முழு நேரமும் மூழ்கி ஈடு இணையற்ற எமது இனத்திற்கு நாமே குழி தோண்டாமல் பயனுள்ள புத்தகங்களுக்கும் கரம் கொடுக்க அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாஜ்மஹால்



விடை கிடைக்காத மர்மங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜஹாங்கீர் பேரரசனுக்கு குர்ரம் என்ற இயற் பெயருடன் பிறந்து பின்னாளில் ஷாஜஹான் என்று பிரபலமான மொகலாய அரசனால் தன் காதல் மனைவிக்காக (14 வது குழந்தையின் பிரசவத்தில் அவள் இறந்த போது துக்கம் தாங்க மாட்டாமல்) கட்டப்பட்டதே இந்த வெள்ளைக் கல் அற்புதமான, தாஜ் மஹால் எனக் கூறப்படுகின்றது.

இத் தாஜ் மஹால் தேஜேஷ்வர் என்ற சிவன் கோவிலே . இதற்கும் ஷாஜகானுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று அடித்துச்சொல்லு கிறார் புருஷோத்தம் நாகேஷ் ஓக் (P.N. Oak) என்ற இந்திய எழுத்தாளர். இவர் தன்னுடைய "தாஜ் மஹால்: உண்மை கதை" என்ற புத்தகத்தில் தாஜ் மஹாலைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்து இருப்பதைப் படிக்கப் படிக்க அதிர்ச்சி, வியப்பு எது உண்மை, எது பொய் என்ற குழப்பம். உண்மை என்று நினைப்பது பொய்யாகி விடுமோ, பொய் என்று நினைப்பது உண்மையாகி விடுமோ என்ற குழப்பம் வேறு!

கிட்டத்தட்ட 108 விதமான விவாதங்களை நம் முன் வைக்கிறார் பி.என். ஓக். சுவாரஸ்யமானவற்றை மட்டும் பார்க்கலாம்.

1. தேஜோ மஹா ஆலயா என்ற சிவன் கோவிலை அன்றைய ஜெய்பூர் மகாராஜாவிடமிருந்து பறித்து அதனை தாஜ் மஹால் என்று பெயரிட்டுவிட்டார் ஷாஜஹான். இதற்கு ஆதாரமாக ஆக்ராவில் இருக்கும் ஜாட் மக்கள் தேஜா என்று பெயர் வைத்துக்கொள்ளு வதை சுட்டிக் காட்டுகிறார் திரு.ஓக். 12 ஜ்யோதிர் லிங்கங்களில் ஒன்றான தேஜோ லிங்கம் ஜாட் மக்களின் தெய்வம்.
2. தாஜ் மஹால் என்ற சொல் மொகலாயர்கள் காலத்திய ஏடுக ளிலோ, அரசவைக் குறிப்புக்களிலோ இல்லை.
3. ஷாஜஹானின் மனைவி பெயர் Mumtaz கடைசி எழுத்து "Z" "J" அல்ல. அதனால் ஷாஜஹான் தன் மனைவி நினைவிற்காக கட்டியி ருந்தால் அதனை Taz mahal என்று பெயரிட்டிருக்க வேண்டும். தவிர, உலகிலுள்ள எந்த இஸ்லாமிய நாடுகளிலும் மஹால் என்ற பெயரில் ஒரு கட்டிடம் கூடக் கிடையாது.
4. இறந்தவர்களைப் புதைத்த இடத்திற்கு மஹால் என்று பெயரி டுவார்களா?
5. தாஜ் மஹாலின் குவிந்த மேல் கூரையின் மீது ஒரு திரிசூலம் காணப் படுகிறது. அதன் நடுத் தண்டு மாவிலைகளும், தேங்காயும் தாங் கிய ஒரு கலசம் போலக் காட்சி அளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மும்தாஜ் இறந்த தேதி சரியாகத் தெரியவில்லை. தன் காதல் மனைவியின் இறந்த தேதியைக் கூட ஒரு அரசன் குறித்து வைக்காமல் இருப்பானா? ஷாஜஹான் மும்தாஜ் காதல் கதை யாரோ இட்டுக்கட்டியது. இந்த காதல் கதைக்கு எந்தவிதமான சரித்திரக் குறிப்புகளோ, புத்தக குறிப்புகளோ இல்லை.

7. இதைக் கட்ட எத்தனை பணம் செலவிடப்பட்டது, கட்டி முடிக்க எத்தனை நாள் ஆயிற்று, யார் கட்டினார்கள் என்பது எல்லாமே தோராயமாகத்தான் சொல்லப்பட்டு இருக்கிறது.

8. ஹிந்துக்களின் கோவில் தான் நதிக்கரையில் அமைக்கப்படும். ஹிந்து கோவில்களில் காணப்படும் சதுர்முகி என்ற நான்கு வாயில் அமைப்பே தாஜ் மஹாலிலும் காணப்படுகிறது. நுழைவாயில் தெற்கு நோக்கி இருக்கிறது. இஸ்லாமிய கட்டிடமாக இருந்தால் மேற்கு பக்கத்தில் நுழை வாயில் அமைந்திருக்கும்.

9. தாஜ் மஹாலைச்சுற்றியுள்ள பல நிலவரைகளின் கதவுகள் செங்கல், சிமெண்ட் ஆகியவற்றால் மூடப்பட்டிருக்கின்றன. அப்படி மூடப்பட்ட ஒரு அறையில் இருந்த சிறிய இடைவெளி மூலம் பார்த்தபோது அங்கு பலவிதமான சிற்ப வேலைப் பாடுகளுடன் கூடிய தூண்கள் நிறைந்த ஹால் இருப்பதை கண்டதாகச் சொல்லுகிறார் ஒரு டெல்லி நகர வாசி. இதைத் தன் புத்தகத்தில் குறிப்பிடுகிறார் திரு. ஓக்.

10. மும்தாஜின் சமாதிக்கு கீழே 22 அறைகள் கொண்ட ஒரு ரகசிய தளம் இருப்பதாகவும் அதற்கு போகும் வழியை மூடி இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார். இந்த தளங்களில் ஹிந்து மத கல்வெட்டுக்கள், மற்றும் சிற்பங்கள் இருக்க வேண்டும் என்றும் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

11. ஹிந்துக்களின் கோவில்களைக் கைப்பற்றி அதையெல்லாம் தங்களுடைய சமாதிகளாக மாற்றிக் கொண்ட அரசர்களை பெரிய கட்டிடக் கலை வல்லுனர்களாகச் சித்தரித்து இந்திய சரித்திரத்தை தலை கீழாக மாற்றிவிட்டதாக ஆதங்கப்படுகிறார் திரு. ஓக்.

12. பொதுவாக புராதனக் கட்டிடங்களின் வயதை அறிய உதவும் "கார்பன் டேட்டிங்" என்ற முறையில் தாஜ் மஹாலின் கற்களை பரிசோதித்தபோது ஷாஜஹானின் காலத்திற்கும் முந்தியவை என்று தெரிய வந்துள்ளது.

13. காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை மொகலாயர் காலத்தில் ஹிந்து கோவில்கள் எப்படி சூறையாடப்பட்டன என்பதற்கு தாஜ் மஹால் ஒரு சாட்சி என்கிறார்.

14. தாஜ் மஹாலைப் பார்க்கச் செல்லும் போது அது ஒரு ஹிந்து கோவில் என்ற எண்ணத்துடன் போனால்தான் அதனுடைய கம்பீரம், விஸ்தீரணம், அழகு இவற்றைப் புரிந்து கொள்ள முடியும் என்றும் அழுத்தம் திருத்தமாக சொல்லுகிறார் திரு. ஓக்.

இன்னும் இதைப்போல பலப் பல ஆதாரங்களை காட்டுகிறார் திரு ஓக். முழு விவரங்கள் விரும்புவோர் திரு.ஓக் அவர்களின் இணைய தளத்திற்கு சென்று படிக்கலாம்.

தாஜ் மஹால் தன்னுள் எத்தனை ரகசியங்களைப் புதைத்து வைத்திருக்கிறதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை முயற்சி செய்து விட்டு, "இதற்கு மேல் என்னால் முடியாது." என்று சொல்பவன் சராசரி. "என் இலட்சியத்தை எட்டும் வரை, முயற்சி செய்து கொண்டேயிருப்பேன்" என்று சொல்பவன், சாதனையாளன். தோல்வியால் துவண்டவர்களை, இந்த உலகம் நினைவில் வைத்திருப்பதில்லை. தோல்வி உங்களுக்கு, புதிய உற்சாகத்தையும், வைராக்கியத்தையும் கொடுக்க வேண்டுமே தவிர, விரக்தியைக் கொடுக்கக் கூடாது. யாருக்கும் முதல் முயற்சியிலேயே, மிகப் பெரிய வெற்றி கிடைத்து விடுவதில்லை.

தடைக்கற்களை, முன்னேற்றத்துக்கான படிக்கற்கள் என்று நினைத்துக் கொள்வோம். "வீழ்ந்தோம்" என்று இந்த உலகம், நம்மைப் பற்றிச் சொல்லும் போது, அதே உலகம், "வென்றோம்" என்று சொல்லும்படி சாதித்துக் காட்டுவோம். தோல்வி என்றைக்கும் நிரந்தரமானதல்ல. நம்முடைய முயற்சிகளில், சில தோல்வியைத் தழுவலாம். ஆனால், முயற்சியே எடுக்காமல் விட்டு விட்டால், நம்முடைய வாழ்க்கையே தோல்வியில் முடியும். உடனுக்குடன் பலனை எதிர்பார்ப்பது, உடனே பலன் கிடைக்காவிட்டால், சோர்ந்து விடுவது சிறுபிள்ளைத்தனம். பிரச்னையை கண்டு, ஓடி ஒளிவது கோழைத்தனம். ஓடி ஒளிவதால், பிரச்னைக்குத் தீர்வு கிடைப்பதில்லை. பிரச்னையின் தன்மைக்கேற்ப, தீர்வு உடனே கிடைக்கலாம் அல்லது சில காலம் கழித்துக் கிடைக்கலாம்.

சிறுபிள்ளையாக இருக்கையில், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட வில்மாருடாப் என்ற பெண்மணி, 1960 ஒலிம்பிக்கில், ஓட்டப் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார். ஐந்து வயதில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட ஷெல்லிமான், 1956 ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டியில், தங்கப் பதக்கம் பெற்றார்.

ஒரு ஊருக்குச் செல்வதற்கு, பல வழிகள் இருப்பது போல, நம்முடைய இலக்கை அடைவதற்கும், பல்வேறு வழிகள் உள்ளன. ஒரு வழி அடைபட்டால், மாற்று வழி பற்றி யோசிக்க வேண்டும். மிகப் பிரபலமான விஞ்ஞானி, ஆல்பர்ட் ஐன்ஸ்டீனிடம், முட்டாள் தனத்துக்கு விளக்கம் கேட்ட போது, "ஒரே வேலையை, திரும்பத் திரும்ப ஒரே மாதிரி செய்துவிட்டு, வித்தியாசமான பலனை எதிர்பார்ப்பதற்குப் பெயர் தான் முட்டாள்தனம்." என்றாராம்.

அலெக்சாண்டர் கிரகாம் பெல், காது கேளாத தன் மனைவிக்கு, காது கேட்பதற்காகக் கருவி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது தான், தொலைபேசியைத் தற்செயலாகக் கண்டுபிடித்தார். உங்களுக்குப் புதிய வாய்ப்பு, பிரச்னை உருவத்தில் வரலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

வெற்றியின் இரகசியம்

நமக்குத் தோல்வியோ, பின்னடைவோ வரும் போது, நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள் விகள் இதோ... "தோல்வி அல் லது பின்னடைவுக்கு என்ன காரணம்? எங்கே தவறு நடந்தது? நான் இதிலிருந்து கற்றுக் கொண்ட பாடம் என்ன? இனிமேல் இந்த மாதிரி தவறு நிகழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?" என்பவையே எனவே இவற்றைநினைத்துப் பாருங்கள். உங்கள் தோள்களின் சுமை எளிதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் செம்மையான உலகு



பள்ளிச் சிறார்களைப் பார்த்தால்
கைபேசியுடன்
கைபேசியில் காதலாம் - இல்லை
வேறு நகைக்கத்தக்க செயலுகளுமாம்
தெருவிலே பார்த்தால்
தேவையற்ற சிந்தனைகளுடன்
இளைஞர்
தேவதையைக் கண்டேன் - என்று
தம்மைப் பேயாக்கி
பின் தொடர்கிறார்கள்
எவளோ ஒருத்தியை!
தேனான கல்வி தனை இழந்து
எதற்காகப் பிறந்தோம் என்பதை
மறந்து
அலைகிறார்கள் சாதிக்கப்
பிறந்தவர்கள்
பஸ்ஸிலே பல முகங்கள் பண்பிழந்து
நிற்குது
பெற்ற தாயை மதியாத பிள்ளையும்
கல்வி புகட்டும் ஆசானை மதியாத
சீடனும்
வெளியிலே வெள்ளையாக .....
என்ன இது உலகம் - என
எண்ணத் தோன்றுகின்றது.
மாறுதலிலும்
செம்மை வேண்டும்.
என்கின்றது என் குரல்
புதிய உலகினை பாரம்பரியத்துடன்
செம்மையாக ஒவ்வொருவரும்
எண்ணுங்கள்
புது உலகு செய்யுங்கள்!

செல்வி.யேனுஷா சற்குணராசா
வட்டுக் கிழக்கு, சித்தங்கேணி

சமூக மேம்பாடு

முல்லைக்கு தேர் கொடுத்த பாரி எங்கே?
முத்தமிழை வடிவமைத்த புலவர் எங்கே?
யுத்தகளம் மெத்தையெனும் நெப்போலியனை
வழியெங்கும் தேடினோமே காணலையே

அகிம்சைக்கு வித்திட்ட மகாத்மாவுடன் ஏழை
கல்விக்கு வழிசமைத்த முன்னோரில்லை
கங்கை கொண்ட சோழ வேந்தன் அழகைக் காணோம்
கரும்புலியாய் சீறிவரும் எழிலைக் காணோம்.

தேரூர்ந்த மன்னன் முதல் இரந்துண்ட ஆண்டிவரை
நீர்க்குமிழி வாழ்வு தனில் அஸ்தமித்த காட்சி கண்டாய்
பேதை மனிதனே விழித்தெழு
தோல்விதான் வெற்றியின் ஏணிப்படிகள்
யுத்தச் சுவடுகளின் கோர நினைவுகளை
ஓரமாய் ஒதுக்கிவிடு

சாம்பலில் மீண்டெழும் பீனிக்ஸ் பறவைகளாய்
மாணவ சமூகமே விரைந்தெழுந்து வா
முடியாது எனும் சொல்லை அகராதியில் அழித்து விடு
சோம்பல் எனும் அரக்கனை வேரோடு வெட்டி விடு

சமத்துவம் வேணுமெனில் கல்வி ஒன்றே கைகொடுக்கும்
கல்விச் சமர் புரிய கிபீர் போல பறந்து வா
இழந்த உரிமைகளை வெற்றி கேடயங்களால் நிரப்பிவிடு
அணுவாயுதம் தோற்கலாம் பேனாமுனை தோற்காது

மாணவச் செல்வங்களால் நம்மண்
மீண்டும் செழிக்க வாழ்த்துக்கள்.

செல்வி.வைஷ்ணவி ஜெயக்குமார்
மட்டு. புனித சிசிலியா பெண்கள் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

கலிங்கம் உலகளாவியரீதியில் நடத்திய கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதைகள்

சமூக சீர்திருத்தம்

இரண்டாயிரத்துப் பன்னிரண்டில்
அதிசயமான அழிவை
நோக்கி நகரும்
உலகம் இது!

விஞ்ஞானத்தின் சொல்லதிகாரம்
மூட நம்பிக்கையின் பித்தலாட்டம்
மூதாதையர்களின் முன்னுணர்வின்
சறுக்கல்!

சமூக தளப் புள்ளியில்
பண்பாட்டுக் கலாச்சாரங்களை அரைத்து
துகளாக்கும் வைரசுப் பூக்கள்!
இரண்டாயிரத்துப் பன்னிரண்டு எனும்
சூத்திர எண்கள்!

பெண்களின் பழங்காலத்து சொத்துக்கள், சீதனம் எனும்
இரண்டாம் நிலை கறுப்புச் சந்தையில்
பேரம் பேசலோடு
நகர்கின்றது அதிவேக பாதையில்!

இது இன்றைய அந்தப்புரப் பக்கங்களின்
அழியாப் புள்ளிகள்!
நாகரிகம் எனும்
வெளிச்சங்கள் பகல் தரும்
நிலவைத் திருடுவதால் இருட்டாகிப் போவது
எமக்கு சொந்தமான விந்தைகள் தான்!
காலத்தின் விடுபடலோடு நம்
கலாச்சார சிற்பங்கள் மௌனிக்கின்றன!
எம் பண்பாட்டு ஒழுக்கங்கள்
சரிந்தால் எமது சரித்திரம் சிரிக்கும்!
சமூகம் சிரித்தால்
எம் சந்ததி வாழும்
நிதர்சன சமூகத்தில்

சாருஜா சந்திரகுமார்.
தரம் - 12 (கலைப் பிரிவு)
தி / மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கப்பட்ட போராளியின் வரலாறு

இந்திய சுதந்திரத்திற்கான போராட்டத்தை காந்தி அகிம்சை வழியில் மேற்க்கொண்ட போது இந்திய சுதந்திரத்திற்கான போர் அகிம்சை வழியில் மாத்திரமல்ல, ஆயுத வழியிலும் மேற்க் கொள்ளப்படும் என ஆயுதம் தரித்துப் போராடி இறுதியில் என்ன நடந்தது? எங்கே போனார்? என முழு உலகமே தேடி சுதந்திர போராட்ட வீரர்கள் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டு "போராளிகளின் மரணம் மரணமாகாது" என கூறப்பட்டவர் தான் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

நேதாஜியின் மரணம் குறித்த விஷயங்களை சேகரித்து வைத்திருப்பவரும், அகில இந்தியப் பார்வார்டு பிளாக் கட்சியின் பொதுச் செயலாளருமான தேவப்பிரதா பிஸ்வாஸ் புதுச்சேரி வந்திருந்தபோது. அவருடன், மாநிலங்களவை உறுப்பினரான பஷரூண் முகர்ஜியும் இருந்தார். அங்கு பிஸ்வாம் முகர்ஜியும் நேதாஜி பற்றிய மர்மங்களை பகிர்ந்து கொண்டார்கள்.

"நேதாஜியின் மரணம் சட்டப்படி உறுதி செய்யப்பட்டுவிட்டதா?"

"ஆகஸ்ட் 18, 1945-ல் தைவான் தலைநகர் தாய்பேய் விமான நிலையத்திலோ, அதற்கு அருகாமையிலோ நடந்த விமான விபத்தில் நேதாஜி இறக்கவில்லை. எப்படியென்றால், நேதாஜி மரணம் குறித்து இந்திய அரசால் அமைக்கப்பட்ட முகர்ஜி கமிஷனிடம், அமெரிக்க உளவுத்துறையால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரத்தில் இதனை உறுதிபட அமெரிக்கா தெரிவித்துவிட்டது. தைவான் நாட்டு அரசும், "தன் நாட்டு எல்லைக்குள் அன்று அப்படி எந்த விபத்தும் நடக்கவில்லை" என்று கூறிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் அரசும், "சுபாஷ் சந்திரபோஸ் என்ற பெயரிலோ இச்சிரோ உக்குடா (நேதாஜிக்கு சூட்டிய புனைபெயர்) என்ற பெயரிலோ எவரும் இறந்து சுடுகாட்டில் எரிக்கப்படவில்லை" என்று தெரிவித்துவிட்டது. 'நேதாஜியினுடையது' என்று ஜப்பானிய கோயில் ஒன்றில் வைக்கப்பட்ட அந்தச் சாம்பல் மற்றும் எலும்புகளை டி.என்.ஏ பரிசோதனை நடத்தவிடாமல் இந்திய அரசு தடுத்துக் குழப்பியது உலகுக்கே தெரியும். இறுதியாக, முகர்ஜி கமிஷனும் ஆகஸ்ட் 18, 1945-ல் நடந்த விமான விபத்தில் நேதாஜி இறக்கவில்லை என்று அரசுக்கு அறிக்கை அளித்துவிட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், எந்தவித காரணமும் கூறாமல், தானே நியமித்த முகர்ஜி கமிஷன் அறிக்கையை ஏற்க முடியாது என்று இந்திய அரசு நிராகரித்ததுதான்" என்கிறார் தேவபிரதா பிஸ்வாஸ்,

"நேதாஜி தொடர்பான ஏராளமான ஆவணங்களை பிரதமர் அலுவலகம், உள்துறை அமைச்சகம் மற்றும் வெளியுறவு அமைச்சகம் ஆகிய மூன்றும் சேர்ந்து அழித்து ஒழித்துவிட்டன. இதை நீதிபதி முகர்ஜி கமிஷனே சுட்டிக்காட்டி உள்ளது என்றார்.

"எல்லா ஆதாரமும் அழிந்து விட்டதா? என்று கேட்டோம். இல்லை, சுமார் 800 பைல்கள் 'ரகசிய பைல்கள்' என்று முத்திரை குத்தப்பட்டு மத்திய அரசிடம் உள்ளன. எல்லா நாடுகளிலும் குறிப்பிட்ட சில ஆண்டுகள் மட்டுமே ரகசிய பைல்களாக வைத்திருந்து, பின்னர் ஆய்வாளர்களுக்காக 'பொது ஆவணமாக' அறிவிப்பார்கள். இந்தியாவிலும் அப்படித் தான். ஆனால், இந்த 800 பைல்களையும் நிரந்தரமாக ரகசிய பைல்களாக இந்திய அரசு வைத்துள்ளது. இது பகிரங்கப் படுத்தப்பட்டால் நேதாஜிக்கு நேர்ந்தது என்ன என்பதை உலகம் அறிந்து கொள்ளும்" என்கிறார்.

"இதை யாரும் பார்க்க முடியாதா என்ன?"

"எனக்குக்காட்டினார்கள். ஆனால் அதைப்பற்றிப் பேசவோ, மேற் கோள்காட்டவோ கூடாது" என்று உறுதிமொழி வாங்கிக் கொண் டார்கள்" என்கிறார் பஷரூண் முகர்ஜி.

"நேதாஜி உயிருடன் இருந்தார் என நீங் கள் சொல்லி வந்தீர்கள்? அரசு இறந்து விட்ட தாகத்தானே கூறி வந்தது?" என்ற கேள்விக்கு பதிலளிக்கும் பிஸ்வாஸ்,

"மறைந்த பிறகு, நாட்டின் உயர் தலைவர்களை கௌரவிக்கும் பாரத ரத்னா விருதை மத்திய அரசு நேதாஜிக்கு அளித்தது. அது பற்றி உச்ச நீதிமன்றத்தில் சர்ச்சை எழுந்தபோது, அங்கே நேதாஜி இறந்ததை நிருபிக்கமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, மத்திய அரசு பின்வாங்கிக்கொண்டது. அதுமட்டுமல்ல. கொடுத்த பாரத ரத்னாவையே திரும்பப் பெற்றது. இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால், ஆகஸ்ட் 18, - 1945-ம் ஆண்டு, விமான விபத்தில் நேதாஜி கொல்லப்பட்டதாக ஜப்பானியர் உதவியுடன் கட்டுக்கதை சொல்லப்பட்டது. நேதாஜியைப் பின் தொடரும் நேச நாட்டுப் படைகளிடம் இருந்து அவரைக் காப்பாற்றவே இக்கதை புனையப் பட்டிருக்கலாம். அதேசமயம், சோவியத் யூனியனுக்குள் நேதாஜி நழுவிச் சென்றிருக்கக்கூடும்' என்றும் சொல்லப்பட்டது.

ஆனால், 'பைசியாபாத் நகரில் வாழ்ந்து வந்த பகவான்ஜி என்கிற ஒரு துறவிதான் நேதாஜி' என்கிற கிசுகிசு கிளம்பியபோது நிலைமையே தலைகீழாக மாறியது. 'கும்நாமி பாபா' என்பதுதான் அந்தத் துறவியின் பெயர். அவர், மிகமிக மர்ம யோகியாக வாழ்ந்து வந்தார். திரைக்குப் பின்னிருந்தே மக்களைச் சந்தித்தார். வெளியே எங்கும் தலைகாட்ட மாட்டார். அவர் மறைந்தபோது, நேதாஜி மறைந்துவிட்டார் என்ற செய்திகள் பரபரப்பாக பேசப் பட்டது. இதன் காரணமாக, 'அவருடைய உடைமைகளை சீல் வைத்து, பைசியாபாத் கருவூ லத்தில் பாதுகாப்பாக வைக்குமாறு' உத்திரப்பிரதேச நீதிமன்றம் ஆணையிட்டது. பிறகு, டிசம்பர் 22, 2001-ல்தான் முகர்ஜி கமிஷனுக்காக அந்த சீல் உடைக்கப்பட்டது.



பகவான்ஜி ஒரு வங்காளி. ஆனால், ஆங்கிலம், இந்துஸ்தானி, சமஸ்கிருதம், ஜெர்மன் ஆகிய மொழிகளில் அவர் புலமை பெற்றிருந்தார். நேதாஜி அணிவது போலவே வட்ட வடிவ மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். தங்க வாட்சும் அணிந்திருந்தார். 1945-ல் நேதாஜி மறைந்ததாக சொல்லப்பட்ட இடத்தில் அவரது மூக்குக் கண்ணாடியோ, தங்க வாட்சோ அகப்படவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

பகவான்ஜி, பார்ப்பதற்கு நேதாஜி போலவே இருப்பார். நேதாஜி போலவே பேசுவார். அந்த வயதில், அவரது உயரமும் தோற்றமும் நேதாஜியை வெகுவாக ஒத்திருந்தது. பல் இடுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றின் கீழே இருந்த தழும்பும்கூட ஒத்திருந்தது. நேதாஜியின் குடும்பப் புகைப்படங்கள் அந்தத் துறவி வீட்டில் கண்டெடுக்கப்பட்டன. நேதாஜியின் பெற்றோரின் அரிய புகைப்படங்கள் மட்டுமல்ல, அவருடைய தந்தையார் பயன்படுத்திய குடையும் அங்கிருந்தது. இந்தத் துறவியின் சீடர்களாக இந்திய தேசிய ராணுவத்தின் உளவுப்பிரிவு தலைவராக செயல்பட்ட டாக்டர் பவித்ரா மோகன் ராய், லீலா ராய், சுனில் தாஸ், திரிலோக்நாத் சக்ரவர்த்தி ஆகிய நேதாஜியின் நெருங்கிய கூட்டாளிகள் இருந்தனர். நேதாஜி மரணம் குறித்து இந்துஸ்தான் டைம்ஸ் நாளேடு கடந்த 2002-ம் ஆண்டு ஒரு ஆய்வை மேற்கொண்டது. அதில், இருவருடைய எழுத்தும் நடையும் ஒரே மாதிரி இருந்ததாக குறிப்பிட்டிருந்தது.

ஒவ்வொரு ஆண்டும் நேதாஜியின் பிறந்த தினமான ஜனவரி 23-ல்தான் பகவான்ஜியின் பிறந்த நாளையும் கொண்டாடுகிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், பவித்ரா மோகன்ராய் உள்ளிட்ட நெருங்கிய கூட்டாளிகளே கொண்டாடினார்கள். 1971-ம் ஆண்டு, நேதாஜியின் மூத்த சகோதரர் சுரேஷ் போசுக்கு நேதாஜி மரணம் குறித்து இரண்டாவதாக அமைக்கப்பட்ட கோஸ்லா கமிஷன் விடுத்த சம்மனின் ஒரிஜினல்கூட பகவான்ஜியின் உடைமைகளுடன் இருந்தது. 1985-ல் துறவியார் மறைந்தபோது, கல்கத்தாவில் இருந்த டாக்டர் பவித்ரா மோகன் ராய், 'நான் மட்டும் வாய் திறந்தால் நாடே பற்றி எரியும்' என்று சொல்லியிருக்கிறார். இன்றைக்கு நேதாஜி உயிருடன் இல்லை. ஆனால், நான்தான் நேதாஜி என்று பலபேர் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். எனவே, அதைப் பற்றி நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. 1945, ஆகஸ்ட் 18-ல் நேதாஜி இறக்கவில்லை என்பது மட்டும் உறுதி" என்கிறார்.

"நேதாஜி ரஷ்யா சென்றதாக சொல்கிறார்களே! அந்த மர்மமும் விலகவில்லையே?"

"இதுதான் மிக முக்கியமான விஷயம். அந்த நேரத்தில் வியட்நாம் விடுதலை பெற்றிருந்தது. வியட்நாம் அதிபர் ஹோசிமின்னுக்கும், நேதாஜிக்கும் நெருங்கிய நட்பு இருந்ததால் அவர்தான் நேதாஜியை பாதுகாத்திருக்க வேண்டும். அதுதான் உண்மையும்கூட." என்கிறவர்,

"நேதாஜி வரலாறு மட்டுமல்ல. இந்திய விடுதலைக்காக போராடிய இந்திய தேசிய இராணுவத்தின் வீரம் செறிந்த வரலாற்றைக்கூட இந்திய அரசு வெளியிடவில்லை. சுதந்திரப்போரின் உண்மை வரலாற்றை வெளியிட, இந்திய அரசு ஏன் மறுத்து வருகிறது என்பது புரியவில்லை. நேரு பிரதமராக இருந்தபோது, இந்திய சுதந்திர வரலாற்றை எழுத 'இராதா வினோத்பால்' என்ற அறிஞரை கேட்டுக் கொண்டது. அவரும் வரலாற்றின் கையெழுத்துப்படியை நேரு அரசிடம் ஒப்படைத்தார். அதுவும் புத்தகமாகி வெளியே வரவில்லை. அப்படி வந்தால், பல உண்மைகள் வெளிப்படும்" அழுத்தமாகச் சொல்கிறார் தேவப்பிரதா பிஸ்வாஸ்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகக் கல்வி பகற் கனவாகுமா ?

கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்த நாம் இன்று வீழ்ந்துவிட்டோம் என்பது உண்மை. கீழே வீழ்வது தோல்வியல்ல, எழாமல் கீழேயே கிடப்பதுதான் தோல்வி. சருகாய் நாம் விழவில்லை. விதையாகத் தான் விழுந்தோம். எழும் போது மலைபோல் எழுவோம் எமது கல்விப் பாரம்பரியத்தை மீண்டும் கட்டி எழுப்புவோம்.

திரு.S.வரதராஜன் B.A(Hons)
முன்னாள் விரிவுரையாளர், பொருளியல்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

2012ல் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி வர்த்தகத்துறையில் 6471பேர் மூன்று பாடங்களிலும் அதி விசேட சித்தி (3A) பெற்றுள்ளனர்.

வர்த்தக,முகாமைத்துவத் துறைக்கு வழமையாக 4500 மாணவர்கள்தான் தெரிவு செய்யப்படுகின்றனர். அவ்வாறாயின் 3A பெற்ற ஏறத்தாழ 2000 க்கு மேற்பட்ட மாணவர்கள் வர்த்தக, முகாமைத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்படாமல் விடுபடப்போகின்றார்கள். யாழ் மாவட்டத்தில் 75 மாணவர்கள் தான் மூன்று பாடங்களிலும் அதி விசேட சித்தி (3A) பெற்றுள்ளனர். யாழ் மாவட்டத்திலிருந்து வர்த்தக,முகாமைத்துவத் துறைக்கு வழமையாக 110 மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அவ்வாறாயின் இங்கு 3A பெற்ற அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இதன்படி இலங்கையின் ஏனைய பிரதேச மாணவர்கள் குறிப்பாகத் தென்பகுதி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படப் போகின்றனர். இந் நிலைமை எதிர்காலத்தில் பல்கலைக்க ழகத்திற்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவதற்கு வழி வகுக்கும்.

தற்போதைய அனுமதி முறை

கலைப் பாட நெறிகளுக்கு தீவளாவிய திறமையின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். எனினும் ஒரு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களின் தொகை, 1993/94 அல்லது 2002/2003 கல்வியாண்டின்போது அம் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர் களின் தொகைக்கு (இதில் எது கூடுதலாக உள்ளதோ அதற்குக்) குறையாதவகையில் தெரிவு செய்யப் படுவர்.

ஏனைய பாடநெறிகளுக்கான மாணவர் தெரிவு பின்வரும் இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படும்.

1. தீவளாவிய திறமை
2. மாவட்ட அடிப்படையிலான திறமை

1. தீவளாவிய திறமை

40 சதவீதமான மாணவர்கள் தீவளாவிய திறமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். Z - புள்ளி ஒழுங்கின்படி தீவளாவிய நிலையின்படி (National rank) தெரிவு செய்யப்படுவர். உதாரணமாக 1000 மாணவர்கள் பல்கலைகழகத்திற்குத் தெரிவு செய்யப்படுவார்களாயின் தீவளாவிய திறமை அடிப்படையில் 400 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். Z - புள்ளி ஒழுங்கின்படி தீவளாவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையின்படி (National rank) முதல் 400 க்குள் வந்த மாணவர்கள் தெரிந்தெடுக்கப்படுவர்.

2. மாவட்ட அடிப்படையிலான திறமை

(I) 55 சதவீதமான மாணவர்கள் மாவட்ட திறமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். 25 மாவட்டங்களினதும் மொத்த சனத்தொகையின் வீதாசாரத்திற்கேற்ப இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

உதாரணமாக 1000 மாணவர்கள் பல்கலைகழகத்திற்குத் தெரிவு செய்யப்படுவார்களாயின் மாவட்ட திறமை அடிப்படையில் 550 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். இத்தொகை 25 மாவட்டங்களினதும் மொத்த சனத்தொகையின் வீதாசாரத்திற்கேற்ப பிரித்து வழங்கப்படும். உதாரணமாக இலங்கையின் மொத்த சனத்தொகையில் யாழ் மாவட்டத்தின் மொத்த சனத் தொகை 10 சதவீதமெனில் 550 மாணவர்களில் 55 மாணவர்கள் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

மாவட்ட நிலையின்படி (District rank) முதல் 55 க்குள் வந்த மாணவர்கள் தெரிந்தெடுக்கப்படுவர்.

(ii) **விசேட ஒதுக்கீடு**

கல்வியில் பின்தங்கிய மாவட்ட மாணவர்களுக்கென 5 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென 16 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

1. நுவரெலியா	2. அம்பாந்தோட்டை	3. யாழ்ப்பாணம்	4. கிளிநொச்சி
5. மன்னார்	6. முல்லைத்தீவு	7. வவுனியா	8. திருகோணமலை
9. பதுளை	10. மட்டக்களப்பு	11. அம்பாறை	12. புத்தளம்
13. அநுராதபுரம்	14. பொலநறுவை	15. மொனராகல	16. இரத்தினபுரி

16 மாவட்டங்களினதும் மொத்த சனத்தொகையின் வீதாசாரத்திற்கேற்ப இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

உதாரணமாக 1000 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுவார்களாயின் கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களிலிருந்து விசேடமாக 50 மாணவர்கள் தெரிவு செய் யப்படுவர். இத் தொகை 16 மாவட்டங்களினதும் மொத்த சனத்தொகையின் வீதாசாரத்திற்கேற்ப பிரித்து வழங்கப்படும். உதாரணமாக 16 மாவட்டத்தினதும் மொத்த சனத்தொகையில் யாழ் மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 20 சதவீதமெனில் 50 மாணவர்களில் 10 மாணவர்கள் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட முறைகள்

கலைத் துறை கல்வியாண்டு 2009 / 10

மாவட்டம்	மாணவர் தொகை				மாவட்டம்	மாணவர் தொகை			
	திறமை		ஏனையவை	மொத்தம்		திறமை		ஏனையவை	மொத்தம்
1. காலி	430	(97%)	14	444	14. அனுராதபுரம்	145	(90%)	17	162
2. மாத்தறை	329	(97%)	11	340	15. கண்டி	203	(84%)	38	241
3. அம்பாந்தோட்டை	219	(97%)	7	226	16. மட்டக்களப்பு	135	(80%)	33	168
4. புத்தளம்	149	(97%)	15	164	17. யாழ்ப்பாணம்	264	(74%)	91	355
5. மொனராகல	127	(96%)	5	132	18. அம்பாறை	145	(74%)	50	195
6. இரத்தினபுரி	364	(96%)	16	380	19. வவுனியா	63	(68%)	30	93
7. குருநாகல்	486	(95%)	23	509	20. திருகோணமலை	47	(64%)	26	73
8. கேகாலை	258	(95%)	14	272	21. கொழும்பு	177	(62%)	107	284
9. களுத்துறை	280	(95%)	14	294	22. பொலநறுவை	33	(61%)	21	54
10. மாத்தளை	94	(94%)	6	100	23. மன்னார்	22	(51%)	21	43
11. நுவரெலியா	98	(93%)	7	105	24. கிளிநொச்சி	6	(13%)	40	46
12. கம்பகா	304	(92%)	25	329	25. முல்லைத்தீவு	6	(12%)	43	49
13. பதுளை	145	(91%)	14	159					

(கலைத்துறைக்கான அனுமதி முழுவதும் திறமை அடிப்படையில் வழங்கப்படுகின்றது. எனினும் 1993 / 94 கல்வியாண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர் தொகைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாத வகையில் மாணவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்ப அனுமதிக்கப்படும் மாணவர் தொகை சீராக்கம் செய்யப்படுகின்றது. இவ்வகையில் சீராக்கம் செய்யப்பட்ட தொகை ஏனையவை என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ளது.)

காலி, மாத்தறை அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 97 சதவீதத்தினர் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 1993 / 94 கல்வியாண்டில் உள்வாங்கப்பட்ட மாணவர் தொகைகேற்ப தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தொகை 3 சதவீதம் மட்டுமேயாகும்.

இதே போன்று மொனராகலை (96%) இரத்தினபுரி (96%) குருநாகல் (95%) கேகாலை (95%) ஆகிய மாவட்டங்களிலும் பெருந்தொகையான மாணவர்கள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 74 சதவீதமான மாணவர்கள் மட்டுமே திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 1993 / 94 கல்வியாண்டில் உள்வாங்கப்பட்ட மாணவர் தொகைகேற்ப தெரிவு செய்யப்பட்ட மாண வர்கள் தொகை 26 சதவீதம் ஆகும்.

யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 355 மாணவர்களில் 264 பேர் மட்டுமே திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். மிகுதி 91 பேர் 1993 / 94 கல்வியாண்டில் உள்வாங்கப் பட்ட மாணவர் தொகைக்கேற்ப தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாவர்.

காலி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 444 மாணவர்களில் 430 பேர் மட்டுமே திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட 14 பேர் மட்டுமே 1993 / 94 கல்வியாண்டில் உள்வாங்கப் பட்ட மாணவர் தொகைக்கேற்ப தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாவர்.

2009/10 கல்வியாண்டில் 586 மாணவர்கள் வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலிருந்தும் கலைத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 361 பேர் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். மிகுதி 225 பேர் 1993 / 94 கல்வியாண்டில் உள்வாங்கப்பட்ட மாணவர் தொகைகேற்ப தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாவர். இதன்படி 62 சதவீதமான மாணவர்கள் மட்டுமே திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2009/10 கல்வியாண்டில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து கலைத்துறைக்கு தெரிவு செய்யப்பட்ட4195 மாணவர்களில் 3841 பேர் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். மிகுதி 354 பேர் 1993 / 94 கல்வியாண்டில் உள்வாங்கப்பட்ட மாணவர் தொகைகேற்ப தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாவர். இதன்படி 92 சதவீதமான மாணவர்கள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட முறைகள்

வர்த்தக முகாமைத்துவ துறை கல்வியாண்டு 2009 / 10

மாவட்டம்	மாணவர் தொகை				மாவட்டம்	மாணவர் தொகை			
	திறமை		ஏனையவை	மொத்தம்		திறமை		ஏனையவை	மொத்தம்
1. காலி	228	(66%)	118	346	14. யாழ்ப்பாணம்	25	(22%)	86	111
2. கொழும்பு	433	(61%)	279	712	15. மாத்தளை	14	(20%)	55	69
3. மாத்தறை	89	(49%)	93	182	16. மட்டக்களப்பு	18	(20%)	72	90
4. குருநாகல்	148	(46%)	171	319	17. பதுளை	21	(15%)	118	139
5. இரத்தினபுரி	123	(45%)	151	274	18. அம்பாறை	13	(13%)	86	99
6. கம்பகா	178	(43%)	238	416	19. பொலநறுவை	7	(11%)	55	62
7. கண்டி	101	(39%)	157	258	20. திருகோணமலை	5	(9%)	51	56
8. களுத்துறை	78	(39%)	123	201	21. மொனராகல	5	(8%)	60	65
9. கேகாலை	49	(35%)	91	140	22. நுவரெலியா	8	(7%)	102	110
10. வவுனியா	12	(31%)	27	39	23. மன்னார்	-		19	19
11. அம்பாந்தோட்டை	25	(24%)	78	103	24. கிளிநொச்சி	1	(4%)	23	24
12. அனுராதபுரம்	31	(22%)	111	142	25. முல்லைத்தீவு	-		23	23
13. புத்தளம்	29	(22%)	104	133					

(மாவட்ட கோட்டா, பின்தங்கிய மாவட்டம் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் தொகையை ஏனையவை என்பது காட்டுகின்றது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 / 94 கல்வியாண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர் தொகைக்கு குறையாத வகையில் மாணவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப் படவேண்டும் என்ற கொள்கை எதிர்காலத்தில் கைவிடப்படுமேயானால் தென்பகுதி மாவட்டங்க ளிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்படமாட்டாது. ஆனால் இக் கொள்கை கைவிடப்படுமாயின் யாழ் மாவட் டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களின் தொகை 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும் அபாயம் உண்டு.

வர்த்தகத் துறையைப் பொறுத்தவரையில் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களில் 22 சதவீதமான மாணவர்களே திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்ப டுகின்றனர். மிகுதி 78 சதவீதமான மாணவர்கள் மாவட்ட கோட்டா மற்றும் பின்தங்கிய மாவட்ட கோட்டா என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

உதாரணமாக 2009/10 கல்வியாண்டுக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு யாழ் மாவட்டத்தி லிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் தொகையான 111 பேரில் 25 பேர் மட்டுமே திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் மிகுதி 86 மாணவர்களும் மாவட்ட கோட்டா மற்றும் பின்தங்கிய மாவட்ட கோட்டா என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட் டவர்களாவர்.

வர்த்தக முகாமைத்துவத் துறையைப் பொறுத்தவரையில் 2009/10 கல்வியாண்டில் காலி மாவட் டத்திலிருந்து 66 சதவீதத்தினரும் கொழும்பு மாவட்டத்தி லிருந்து 61 சதவீதத்தினரும் மாத்தறை மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்றவர்களில்49 சதவீதத்தினரும் குருநாகல் மாவட்டத் திலிருந்து 46 சதவீதத்தினர் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகம் சென்றனர். ஆனால் யாழ் மாவட்டத்திலிருந்து 22 சதவீதத்தினர் மட்டுமே திறமை அடிப்படையில் பல்கலைக்கழகம் சென்றனர்.

2009/10 கல்வியாண்டுக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு வர்த்தக,முகாமைத்துவ துறைக்கு 4132 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 1641 பேர் திறமை அடிப்படையிலும் 2491 பேர் மாவட்ட கோட்டா மற்றும் பின்தங்கிய மாவட்ட கோட்டா என்பவற்றின் அடிப்படை யிலும் தெரிவு செய்யப்பட்டனர்.

திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் மாவட்டரீதியான பங்கினைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட முறைகள்
வர்த்தக முகாமைத்துவ துறை கல்வியாண்டு 2009 / 10

மாவட்டம்	திறமை	மாவட்டம்	திறமை	மாவட்டம்	திறமை
1. கொழும்பு	26.4%	10. அனுராதபுரம்	1.9%	19. பொலநறுவை	0.4%
2. காலி	13.9%	11. புத்தளம்	1.8%	20. நுவரெலியா	0.5%
3. கம்பகா	10.8%	12. அம்பாந்தோட்டை	1.5%	21. மொனராகல	0.3%
4. குருநாகல்	9.0%	13. யாழ்ப்பாணம்	1.5%	22. திருகோணமலை	0.3%
5. இரத்தினபுரி	7.5%	14. பதுளை	1.3%	23. மன்னார்	-
6. கண்டி	6.2%	15. மட்டக்களப்பு	1.1%	24. கிளிநொச்சி	0.06%
7. மாத்தறை	5.4%	16. மாத்தளை	0.8%	25. முல்லைத்தீவு	-
8. களுத்துறை	4.7%	17. அம்பாறை	0.8%		
9. கேகாலை	3.0%	18. வவுனியா	0.7%		

திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 1641 பேரில் 433 பேர் (26.4%) கொழும்பு மாவட்டத்திலிருந்தும் 228 பேர் (13.9%) காலி மாவட்டத்திலிருந்தும் 178 பேர் (10.8%) கம்பகா மாவட்டத்திலிருந்தும் 148 பேர் (9%) குருநாகல் மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 1641 பேரில் 997 பேர் கொழும்பு, காலி, கம்பகா, குருநாகல் ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 61 சதவீதத்தினர் இந்த நான்கு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

அதேநேரத்தில் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 1641 பேரில் 25 பேர் மட்டுமே (1.5%) யாழ் மாவட்டதிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலிருந்தம் மொத்தம் 38 மாணவர்கள் மட்டுமே அதாவது 2.3 சதவீதத்தினர் மட்டுமே திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியாண்டு 2009 / 10

மாவட்டம்	மருத்துவம்	பொறியியல்	வர்த்தக முகாமைத் துவம்
கொழும்பு	66%	66%	61%
காலி	55%	55%	66%
மாத்தறை	66%	66%	49%
கண்டி	47%	47%	39%
யாழ்ப்பாணம்	26%	56%	22%

கல்வியாண்டு 2009/10 ல் மருத்துவம், பொறியியல், வர்த்தக, முகாமைத்துவம் ஆகிய துறைகளுக்கு கொழும்பு, மாத்தறை, காலி, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் சதவீதங்களைப் அருகிலுள்ள அட்டவணை காட்டுகின்றது.

பொறியியல் துறையைப் பொறுத்தவரையில் 2009/10 கல்வியாண்டில் மாத்தறை மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்றவர்களில் 70 சதவீதத்தினரும் கொழும்பு மாவட்டத்திலிருந்து 64 சதவீதத்தினரும் காலி மாவட்டத்திலிருந்து 59 சதவீதத்தினரும் கண்டி மாவட் டத்திலிருந்து 49சதவீதத்தினரும் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகம் சென்றனர். யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்றவர்களில் 56 சதவீதத்தினர் திறமை அடிப்படையில் சென்றனர்.

மருத்துவத்துறையைப் பொறுத்தவரையில் 2009/10 கல்வியாண்டில் கொழும்பு மாவட்டத்திலிருந்து 66 சதவீதத்தினரும் மாத்தறை மாவட் டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்றவர்களில் 66 சதவீதத்தினரும் காலி மாவட்டத்திலிருந்து 55 சதவீதத்தினரும் கண்டி மாவட்டத்திலிருந்து 47 சத்வீதத்தினரும் திறமை அடிப்படையில் பல்கலைக் கழகம் சென்றனர். ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்றவர்களில் 26 சதவீதத்தினர் மட்டுமே திறமை அடிப்படையில் சென்றனர். இதன்படி மருத்துவ துறைக்கான அனுமதியில் யாழ் மாவட்டம் பின் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வர்த்தக முகாமைத்துவ துறை

குறித்த ஓர் ஆண்டில் இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் முகாமைத்துவத் துறைக்கு 4000 மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர் எனக்கொள்க.

இதன்படி பின்வரும் முறைகளில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

1. தீவளாவிய திறமை அடிப்படையில் 1600 பேர் தெரிவு செய்யப்படுவர்.
2. மாவட்ட திறமை அடிப்படையில் பின்வரும் இரண்டு முறைகளில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.
   - (அ) 25 மாவட்டங்களிலிருந்தும் 2200 மாணவர்கள்
   - (ஆ) கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களிலிருந்தான விசேட ஒதுக்கீட்டின் கீழ் 200 மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ம் குடிசன மதிப்பீட்டின்படி யாழ் மாவட்டத்தின் சனத்தொகை இலங்கையின் மொத்த சனத் தொகையில் 3 சதவீதமாகும்.

கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களின் மொத்த சனத்தொகையில் யாழ் மாவட்டத்தின் சனத்தொகை 10 சதவீதம் ஆகும்.

இத்தரவுகளின்படி யாழ் மாவட்டத்திலிருந்து முகாமைத்துவத் துறைக்குப் பின்வருமாறு மாணவர் கள் தெரிவு செய்யப்படுவர்.

தீவளாவிய திறமை

Z - புள்ளி ஒழுங்கின்படி தீவளாவிய நிலையில் (National rank) 1600 க்குள் 10 மாணவர்கள் யாழ் மாவட்டத்தில் உள்ளனர் என எடுத்துக்கொண்டால் தீவளாவிய திறமையின்படி 10 மாணவர்கள் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

மாவட்டத் திறமை

25 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் 2200 மாணவர்களில் 3 சதவீதத்தினர் அதாவது 66 மாணவர்கள் மாவட்ட நிலையின்படி (District rank) தெரிவு செய்யப்படுவர்.

கல்வியில் பின்தங்கிய மாவட்ட விசேட ஒதுக்கீடு

16 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் 200 மாணவர்களில் 10 சதவீதத்தினர் அதாவது 20 மாணவர்கள் மாவட்ட நிலையின்படி (District rank) தெரிவு செய்யப்படுவர்.

இதன்படி

தீவளாவிய திறமை - 10 மாவட்ட ஒதுக்கீடு - 66
கல்வியில் பின்தங்கிய மாவட்ட விசேட ஒதுக்கீடு - 20
மொத்தம் 96

குறித்த ஆண்டில் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 96 மாணவர்களில் 86 பேர் ஒவ் வொரு ஆண்டும் கட்டாயம் தெரிவு செய்யப்படுவர். ஏனெனில் இத்தொகை யாழ் மாவட்டத்திற் கென்றே ஒதுக்கப்பட்டது. சனத்தொகையில் அல்லது பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய் யப்படும் மாணவர் தொகையில் மாற்றம் ஏற்படும்போது மட்டுமே இத்தொகையில் மாற்றம் ஏற் படும். திறமை அடிப்படையில் யாழ்.மாவட்டதிலிருந்து பல்கலைக்கழங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் தொகை மிகவும் குறைவாக இருப்பது எதிர்காலத்தில் பல்கலைக்கழக கல்விக்கான வாய்ப்பு குறைவடையலாம்.

1970களில் யாழ் மாவட்ட மாணவர்கள் அரசாங்கத்திடம் கேட்ட கேள்வி 260 புள்ளிகளைப் பெற்ற எமக்கு பல்கலைக்கழகக் கல்வி மறுக்கப்படுகின்றது. ஆனால் அதே நேரத்தில் 200 புள்ளிகளைப் பெற்ற தென்பகுதி மாவட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகின்றது இது என்ன நியாயம்?

அண்மையில் வெளியிடப்பட்ட 2011/2012 கல்வியாண்டுக்கான Z- புள்ளிகளின்படி முகாமைத் துவத்துறைக்கு காலி மாவட்டத்திற்கு 1.5668, யாழ் மாவட்டத்திற்கு 1.1942 ஆகும். 1.5667 Z- புள்ளிகளைப் பெற்ற எமக்கு பல்கலைக்கழகக் கல்வி மறுக்கப்படுகின்றது. ஆனால் அதே நேரத்தில் 1.1942 Z- புள்ளிகளைப் பெற்ற யாழ் மாவட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்ப டுகின்றது இது என்ன நியாயம்? என்று இன்று காலி மாவட்ட மாணவர்கள் அரசாங்கத்திடம் கேட்கின்றார்கள்.அன்று தரப்படுத்தலினால் நாம் பாதிக்கப்பட்டோம். தென்பகுதி மாவட்ட மாண வர்கள் நன்மை அடைந்தனர். இன்று தரப்படுத்தலினால் தென்பகுதி மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்ப டுகின்றனர். நாம் நன்மை அடைகின்றோம்.
70 களில் தரப்படுத்தலுக்கு எதிராகப் போராடிய தமிழ் மாணவர் சமூகம் இன்று தரப்படுத்தல் நீக்கப்படுதலுக்கு எதிராக போராட வேண்டிய நிலையில் உள்ளது.

கல்வியில் உயர்ந்தநிலையில் இருந்த நாம் இன்று வீழ்ந்தவிட்டோம் என்பது உண்மை. கீழே வீழ்வது தோல்வியல்ல, எழாமல் கீழேயே கிடப்பதுதான் தோல்வி. சருகாய் நாம் விழவில்லை. விதையாகத் தான் விழுந்தோம். எழும்போது மலைபோல் எழுவோம் . எமது கல்விப் பாரம்பரியத்தை மீண்டும் கட்டி எழுப்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீற்றங்களுக்கு சீனப்பெருஞ்சுவர்

உலக அதிசயங்களில் ஒரே ஒரு அதிசயத்திற்கு மட்டும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. விண்ணிலிருந்து பார்த்தால்கூட அந்த அதிசயம் கண்களுக்குத் தெரியும் என்பதுதான் அந்த சிறப்பு. சீன வரைபடத்தில் இயற்கையே வரைந்த கோடுபோல் சுமார் 7500 கிலோமீட்டர் பரந்து விரிந்து கிடக்கும் சீனப் பெருஞ்சுவர்தான் அந்த சிறப்பைப் பெற்ற ஒரே உலக அதிசயம். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பிறகும் நமக்கு பிரமிப்பூட்டும் அந்த நீள் சுவர் உருவாவதற்குக் காரணமாக இருந்த சீன தேசத்துப் பெருமன்னனைப் பற்றித்தான் தெரிந்துகொள்ளவிருக்கி றோம். சீனப் பெருஞ்சுவரை மட்டுமல்ல பல சிற்றரசுகளாகச் சிதறிக் கிடந்த சீனப் பெருநிலத்தை ஒருங்கி னைத்து ஒன்றுபட்ட சீனாவாகவும் உலகுக்குத் தந்த அந்த மன்னனின் பெயர் ஷி ஹ்வாங்டி (Shi Huangdi).

உலக வரலாற்றில் ஷி ஹ்வாங்டி என்ற மன்னனின் முக்கியத்துவத்தை நாம் முழுமையாக அறிய வேண்டுமென்றால் சீனாவின் வரலாற்றுப் பின்னனியை முதலில் அறிந்துகொள்ள வேண்டும். கி.மு 259-ஆம் ஆண்டு சீனாவில் பிறந்தார் ஷி ஹ்வாங்டி. அவர் பிறப்பதற்கு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை சீனாவை Zhao மன்னர்கள் ஆண்டு வந்தனர். ஆயிரம் ஆண்டு காலமாக நடந்த அந்த மன்னர்களின் ஆட்சி சிறிது சிறிதாக வலுகுன்றி சீனா நிறைய சிற்றரசுகளாகச் சிதறுண்டு கிடந்தது. சிற்றரசர்கள் அடிக்கடி தங்களுக்குள்ளாகவே போரிட்டு வந்தனர். அதன் காரணமாக சில சிற்றரசுகள் இருந்த இடம் தெரியாமல் போயின. அனைத்து சிற்றரசுகளிலும் பலம் பொருந்தியதாக விளங்கியது சின் (Qin) அரசு. அந்த அரச வம்சத்தில்தான் பிறந்தவர்தான் செங் (Zheng) என்ற ஷி ஹ்வாங்டி.

ஷி ஹ்வாங்டி பதின்மூன்றாவது வயதிலேயே அரியனை ஏறினார். ஆனால் 21-ஆவது வயதில்தான் ஆட்சியின் முழு அதிகாரமும் அவர் கைகளுக்கு வந்தது. மிகச்சிறந்த அறிவாளியாக இருந்த இளவரசர் செங் தகுதி வாய்ந்த தளபதிகளை தேர்ந்தெடுத்து தன் படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையைப் பெருக்கினார். ஏற்கனவே வலிமை குன்றியிருந்த எஞ்சிய சிற்றரசுகள் மீது படையெடுத்து அவற்றை ஒவ்வொன்றாகக் கைப்பற்றத் தொடங்கினார். சீனாவின் கடைசி சிற்றரசு கி.மு.221-ஆம் ஆண்டு அவர் வசமாகி ஒட்டுமொத்த சீனாவும் அவரது ஆட்சியின் கீழ் வந்தது. அப்போது அவருக்கு வயது 38-தான் ஆனது. அந்த சமயத்தில் அவர் தனக்கு சூட்டிக்கொண்ட பெயர்தான் ஷி ஹுவாங்டி "முதல் பேரரசர்" என்பது அதன் பொருள். ஒட்டுமொத்த சீனாவும் தனது ஆளுமையின் கீழ் வந்ததும் அவர் உடனடியாக பல அதிரடி மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் செயல்படுத்தத் தொடங்கினார்.

ஒற்றுமையின்மைதான் சீனா சிதறுண்டு கிடப்பதற்குக் காரணம் என்பதை உணர்ந்த அவர் "பியூடல் சிஸ்டம்" எனப்படும் பிரபுத்துவ அரசு முறையை முற்றாக ஒழித்தார். சீனாவை மொத்தம் 36 மாநிலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநரை நியமித்தார். அதுமட்டுமல்ல ஒரே பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து ஆளுநராக இருந்த முறையையும் ஒழித்தார். ஆளுநர்கள் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதையும், அதிக செல்வாக்கை உருவாக்கிக் கொள்வதையும் தவிர்க்க அவர்களை சில ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு மாநிலமாக மாற்றினார். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநரோடு ஓர் இராணுவ தலைவரையும் நியமித்தார். அனைவருமே மன்னரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டவர்கள்தான்.

அவர் அறிமுகம் செய்த அந்த மாற்றங்களால் சீனா ஒற்றுமை உணர்வோடு வலுப்பெறத் தொடங்கியது. நாடு முழுவதும் நல்ல சாலைகள் அமைக்கப்பட்டன. எந்த மாநிலத்திலாவது கலகமோ, உட்பூசலோ நேர்ந்தால் உடனடியாக அந்தப் பகுதிக்கு மத்திய அரசின் இராணுவத்தை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. அரசியல் மற்றும் இராணுவ மாற்றங்களோடு வர்த்தகத்திலும் மாற்றங்களை கொண்டு வந்தார் ஷி ஹுவாங்டி. பொருட்களை அளக்கும் கருவிகளையும், அளவை முறைகளையும் ஒருங்கினைத்தார். நாடு முழுவதும் பொதுவான நாணய முறையை அறிமுகப்படுத்தினார். சாலைகள் மற்றும் கால்வாய்களின் கட்டுமானத்தை நேரடியாக



அடிபணியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வையிட்டார். சீனா முழுவதற்கும் ஒருங்கினைந்த சட்டத்தை அறிமுகம் செய்ததோடு எழுத்து வடிவத்தையும் சீராக்கினார்.

இவ்வுளவு சிறப்பான செயல்களை செய்தும், வரலாற்றின் பழிச்சொல்லை சம்பாதிக்கும் ஒரு செயலையும் செய்தார் ஷி ஹூவாங்டி. கி.மு 213-ஆம் ஆண்டு அவர் வேளாண்மை, மருத்துவம் போன்ற முக்கியத்துறை சம்பந்தபட்டவற்றை தவிர்த்து சீனாவில் உள்ள மற்ற நூல்கள் அனைத்தையும் எரித்துவிடும்படி கட்டளையிட்டார். அதற்கு ஒரு முக்கிய காரணம் "கன்பூசியஸ் சித்தாந்தம்" உட்பட போட்டி சித்தாத்தங்கள் அனைத்தையும் அவர் அழிக்க நினைத்துதான். ஆனால் எல்லா நூல்களையும் அழித்துவிடாமல் தடை செய்யப்பட்ட நூல்களின் சில பிரதிகளை அரசவை நூலகத்தில் வைக்குமாறு உத்தரவிட்டார். சீனாவின் தென்பகுதியில் படை யெடுத்து பல பகுதிகளை கைப்பற்றி சீனாவுடன் இணைத்துக்கொண்டார் ஷி ஹவாங்டி.

வடக்கிலும், மேற்கிலும் பல பகுதிகளை கைப்பற்றினாலும் அந்தப் பகுதிகளை முழுமையாக அவரது ஆட்சிக்கு கீழ் கொண்டு வர முடியவில்லை. Zhao மன்னர்கள் ஆட்சிக்காலத்திலேயே வடக்குப் பிரதேசங்களிலிருந்து சீனாவுக்குள் அடிக்கடி நுழைந்து தாக்குதல்களை நடத்தி வந்தனர் சிங் E (Xiongnu) இன மக்கள். அந்த தாக்குதலை தடுத்து நிறுத்த சீன எல்லை நெடுகிலும் சிறிய, சிறிய சுவர்களை அமைக்கத் தொடங்கினர் சீனர்கள். அப்படி சிறு சிறு சுவர்களாக இருந்ததை இணைத்து ஷி ஹூவாங்டி அமைக்கத் தொடங்கியதுதான் மிக நீண்ட சீனப் பெருஞ்சுவர் ஆனது. சீனப் பெருஞ்சுவரை கட்டுவதற்காகவும், போர் செலவுகளுக்காகவும் பொதுமக்கள்மீது கடுமையானவரிகளை விதித்தார் ஷிஹூவாங்டி. அதனால் அவரை மக்கள் வெறுக்கத் தொடங்கினர். அவர் மீது கொலை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் அவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து வந்த ஷி ஹூவாங்டி கி.மு.210-ஆம் ஆண்டில் தனது 49-ஆவது வயதில் இயற்கையாகவே காலமானார். அவர் கல்லைறையைச் சுற்றி மிக விமரிசையாக ஆறாயிரம் டெரகோட்டா (Terracotta Army) களிமண் வீரர்களின் சிற்பங்கள் புதைக்கப்பட்டன. மரணத்திற்கு பிறகும் அவருக்கு சேவை புரிய அந்த சிற்பங்கள் உதவும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு செய்யப்பட்டது.

சீன வரலாற்றில் ஷி ஹூவாங்டி என்ற மன்னன் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் மிகப்பெரியது. அவர் மறைந்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் அவர் உருவாக்கித்தந்த அரசாட்சி முறையும், சட்ட முறையும்தான் நவீன சீனாவுக்கு அடிப்படையாக விளங்குகின்றன. மன்னன் ஷி ஹூவாங்டியின் "சின்" பேரரசின் ஆட்சி பலம் பொருந்தியதாக இருந்ததால்தான் அதன் பெயரிலேயே அந்த தேசம் சீனா என்றழைக்கப்படுகிறது. புத்தகங்களை எரித்ததிலும், போட்டி சித்தாந்தங்களை அழிக்க நினைத்ததிலும் மன்னன் ஷி ஹூவாங்டி தவறு செய்திருந்தாலும், சீன வரலாற்றில் அவரது ஒட்டுமொத்த பங்களிப்பை எவராலும் மறுக்க முடியாது.

பாதுகாப்புக்காகவும், எதிரிகளை அண்ட விடாமல் தடுப்பதற்காகவும் கட்டப்படத் தொடங்கிய ஓர் உன்னத கட்டுமான அதிசயம்தான் சீனப் பெருஞ்சுவர். இன்றும் சீனாவின் செல்வாக்கை அது உலகுக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த உலக அதிசயத்தையும், அதற்கு ஒத்த ஓர் அதிசய ஆட்சி முறையையும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வழங்க மன்னன் ஷி ஹூவாங்டிற்கு உறுதுணையாக இருந்த பண்புகள் ஆராய்ந்து முடிவு எடுக்கும் அறிவும், முடிவெடுத்து அதனை அச்சமின்றி செயல் படுத்தும் திறனும், எதிரிகளை திணறடிக்கும் தைரியமும், ஒற்றுமையே பலம் என்ற அவரது நம் பிக்கையும்தான் எனவே இவற்றை நாமும் வழியாட்டியாக கொண்டு வரலாறு படைப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கையின் அதிசயங்களுள் ஒன்று, முத்து. எங்கோ கடலடியில் விளையும் முத்து, பெண்களின் கழுத்தை அலங்கரிக்கிறது. முத்து உருவாகும் விதம் தெரியுமா உங்களுக்கு? முத்துச் சிப்பி என்ற உயிரினத்திடம் இருந்து முத்து கிடைக்கிறது. அந்த உயிரினத்தில் இருந்து முத்து கிடைப்பது வியப்பூட்டும் விஷயம்.

கடல் நீரில் உள்ள கால்சியம் கார்பனேட் என்ற தாதுப் பொருளையும் மற்றும், சில பொருட்களையும் சிப்பி உட்கொள்வதால் முத்து தோன்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிப்பியினுள் முத்து சென்றுவிட்டால் அதற்கு ஓர் உறுத்தல் ஏற்பட்டு, தன்னிடம் உள்ள நாக்கர் என்ற ஒருவிதத் திரவத்தை அதன் மீது சுரந்து மூடிவிடும்.

அதைத் தெரிந்துகொண்ட சீனர்கள், சிப்பி வாய் திறந்திருக்கும்போது அதனுள், ஈயத்தால் செய்த சிறு புத்தர்சிலையைப் புகுத்தினார்கள். சிறிது காலம் கழித்து சிப்பியைத் திறந்து பார்க்கும்போது, முத்துத் திரவத்தால் புத்தர் சிலை பொதியப்பட்டிருக்கும். ஜப்பானியர்கள், சிப்பியின் வாய் வழியாகச் சிறு தானியத்தை உள்ளே தள்ளிவிடுவார்கள். அவ்வாறு தள்ளப் பட்ட தானியத்தின் மீது நாக்கர் திரவம் படிந்து, நன்கு விளைந்த முத்தாக வெளியில் எடுக்கப் பட்டு, நல்ல விலைக்கு விற்பனையாகிறது.

இனி, உயர்ந்த முத்துகள் எப்படி உருவாகின்றன என்று பார்க்கலாம். கடலில் உள்ள சில புல்லுருவிகள் (தம்மால் நேரடியாக உணவுப்பொருட்களை உருவாக்க முடியாமல் சத்துக்காக பிற தாவர இனங்களைச் சார்ந்திருப்பவை), சிலநேரங்களில் சிப்பியின் வாய் வழியாக உள்ளே தவறிச் சென்று விடுகின்றன. அப்போது சிப்பியின் உட்பாகத்தில் ஓர் உறுத்தல் ஏற்பட்டு, நாக்கர் திரவத்தை அதன் மீது பொழியும். அவ்வாறு பொழியும்போது அந்தப் புல்லுருவி மடிந் துவிடும். அதன் மீது நாக்கர் திரவம் பல அடுக்குகளில் படிந்துவிட, அது விலை உயர்ந்த முத் தாக மாறிவிடுகிறது. இம்முறையிலேயே சிறு மணல்துகள் உள்ளே சென்றாலும் அது முத் தாகிவிடுகிறது. ஆனால் முந்தைய முறையில் உற்பத்தியாகும் முத்துதான் மிகுந்த விலை மதிப்பு உடையதாகும்.முன்னைய காலங்களில் மன்னார் பிரதேசம் முத்துக் குளித்தல் தொழிலில் சிறப்பிடம் பெற்றிருந்தது.இதில் தமிழர்கள் கூடியளவு சிறப்புப் பெற்றிருந்தனர்.இதன் மூலம் இலங்கை கூடியளவு வருமானத்தையும் பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்குறிப்புகள்

சில பெண்களுக்கு முதுகு அகலமாக இருக்கும் அவர்கள் தினமும் நீண்ட தூரம் நடக்க வேண்டும். நடந்தால் இவர்களுடைய முதுகின் அகலம் குறையும் முதுகு அழகாக மாறும்.

சில பெண்களுக்கு கன்னம் உப்பிப் போய்க் கிடக்கும். இப்படி கன்னம் பெருத்த பெண்கள் தினமும் கொஞ்ச நேரம் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உரக்கப் படிக்க வேண்டும். தினமும் வெந்நீரில் உப்பைப் போட்டு கன்னங்களுக்கு ஒத்தடம் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் கன்னங்கள் வலுப்பெறுகின்றன. ஊளைச் சதை குறைகிறது. கன்னத்திலுள்ள ஊளைச் சதை குறைந்துவிட்டால் அந்தக் கன்னங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்

மூக்கு பெரிதாக உள்ள பெண்கள் மூக்கின் நுனியில் கொஞ்சம் அதிகமாக மேக்கப் போட்டுக் கொள்ள வேண்டும். அப்படி போட்டுக் கொண்டால் அவர்கள் மூக்கு பார்ப்பதற்குச் சின்னதாகத் தெரியும்.

மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டிருக்கும் பெண்களுக்குக் கண்களின் அழகு கொஞ்சம் குறையும் மூக்குக் கண்ணாடி அணியும் அந்தப் பெண்கள் கொஞ்சம் பட்டையாகவே தங்கள் கண் இமைகளுக்கு மை தீட்டிக் கொள்ள வேண்டும்.

வயதான பெண்கள் அவசியம் தங்கள் கண்களுக்கு மை தீட்டிக் கொள்ள வேண்டும். மை தீட்டிக் கொள்வதால் கண்களில் உள்ள வயதான தோற்றம் போகும். இளமையான தோற்றம் வரும்.

நாற்பது வயதாகிவிட்ட பெண்களும் இளமையுடன் இருக்கலாம். அழகுடன் இருக்கலாம். இருக்க முடியுமா? முடியும். தினமும் ஒரு டம்ளர் ஆரஞ்சுப் பழ ஜூஸ் சாப்பிட வேண்டும். நிறையச் சாப்பிடக்கூடாது. ஸ்வீட், தயிர், பால், முட்டை, நெய், வெண்ணெய், மாமிசம், தேங்காய், கிழங்கு வகைகள் சாப்பிடக்கூடாது. அடிக்கடி வெயிலில் சுற்றக் கூடாது. தினமும் காலையிலும் மாலையிலும் விரைவாக நடக்க வேண்டும்.

பெண்கள் சூடான தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி வைத்து அதிலிருந்து வரும் ஆவியைத் தங்கள் முகத்தில் படும்படிச் செய்ய வேண்டும். இப்படிச் செய்துவிட்டு முகத்தைச் சோப்புப் போட்டுக் கழுவிவிட வேண்டும். முகம் சுத்தமாகும்.மிருதுவாகும் பொலிவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் தலைக்குக் கொஞ்சம் எண்ணெய் தடவிவர வேண்டும். அது தேங்காய் எண்ணெய்யாக இருந்தால் நல்லது. எண்ணெய் தடவும்போது விரல்களின் நுனியால் தலையில் அழுத்திப்பிடித்துவிட்டுத் தேய்க்க வேண்டும். அப்படி செய்தால் கூந்தல் எண்ணெய்ப் பசையுடன் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். வெளியில் போகிறவர்களுக்குக் கோடைக் காலத்தில் கூந்தல் வைக்கோலைப் போல் உலர்ந்துவிடும். எவ்வளவுதான் எண்ணெய் தடவினாலும் போதாது. இப்படி இருந்தால் வாரத்திற்கு ஒரு தடவை காய்ச்சிய எண்ணெய்யைத் தலையில் நன்றாகத் தேய்த்துவிட்டு ஒரு மணி நேரம் ஊறிய பின்பு தலைக்கு ஊற்றிக் கொள்ள வேண்டும். ஆண்களுக்கு இது மிகவும் முக்கியம்.

பெண்கள் வெயிலில் வெளியில் போகும்போது இருபது நிமிஷங்களுக்குமேல் தொடர்ந்து வெயிலில் இருக்கக் கூடாது. கால்மணி நேரத்துக்கு ஒரு தடவை எங்கேயாவது நிழலில் கொஞ்ச நேரம் நின்று ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து வெயிலில் நின்றால் பெண்களின் அழகு கெட்டுப் போகும். முகம் சுருங்கும். உடம்பின் பளபளப்பும் போய்விடும்.

அடிக்கடி குளிர்ந்த பானங்களைக் குடிப்பவர்களும் ஐஸ்கிரீம் சாப்பிடுகிறவர்களும் சாக்லேட் தின்பவர்களும் காப்பி குடிப்பவர்களும் பருமனாகி விடுகிறார்கள். உடம்பு இளைக்க வேண்டும் பெருக்க கூடாது என்று நினைக்கிறவர்கள் இவற்றையெல்லாம் தொடக்கூடாது.

தினமும் காலையில் வெந்நீரில் ஓர் எலுமிச்சைப் பழத்தைப் பிழிய வேண்டுமம அதில் ஒரு ஸ்பூன் தேனைக் கலக்க வேண்டுமம அதைப் பருக வேண்டும். இப்படிச் சாப்பிட்டு வந்தால் அவர்கள் ஒல்லியாக இருப்பார்கள். அவர்கள் குரல் இனிமையாக இருக்கும்.

ஹி ஹி இது எப்படி இருக்கு

ஒரு மனைவி தன் கணவன் தன்னை நீண்டகாலமாக ஏமாற்றுவதாக சந்தேகம் கொண்டிருந்தாள். வீட்டு வேலைக்காரியுடன் தன் கணவனுக்கு தொடர்பு இருப்பதாக உறுதியாக நம்பினாள். இருவரையும் கையும் களவுமாகப் பிடிக்க ஒருதிட்டம் தீட்டினாள்.

ஒருநாள் திடீரென்று மதியம் வீட்டு வேலைக்காரியை அரைநாள் விடுமுறைகொடுத்து அனுப்பினாள். இதை கணவரிடம் சொல்லவில்லை. அன்று வேலைமுடிந்து வந்த கணவர், "குட்டி, எனக்கு இன்று வயிறு சரியில்லை" என்றுசொல்லி குளியலறைக்குச் சென்றார். இரவில் அவர்கள் படுக்கைக்கு சென்றபோதும், கணவர் பழையபடி மீண்டும் குளியலறைக்குச் சென்றுவிட்டார்.

மனைவி உடனடியாக வேலைக்காரியின் படுக்கைக்குச் சென்று படுத்துக் கொண்டாள். உடனே விளக்குகளையும்அணைத்து விட்டாள். அவர் அமைதியாக சத்தமில்லாமல் பூனைபோல் வந்து எதுவும் பேசாமல் கட்டிப் பிடித்துமுத்தம் கொடுக்க ஆரம்பித்தார்.

உடனே மனைவி கோபத்துடன் "நான் இங்கே இருப்பேன் என்று நீங்கள் எதிர்பார்க்கவில்லை தானே?" என்றுகத்திவிட்டு விளக்கைப் போட்டாள்.

"இல்லை மேடம்" என்றான் காவல்க்காரன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் எய்ட் இன் ஓவியப் போட்டியில் வெற்றி பெறும் ஓவியர்கள்

முதற் பரிசு - ரூபா . 7500
இஸ்லாமில் மொகமட் ஜெப்ரி
சாய்ந்த மருது, அக்கரைப்பற்று

இரண்டாம் பரிசு - ரூபா . 5000
யோகானந்தன் அரவிந்தன்
ஞானவைரவர் கோவிலடி, இணுவில்

மூன்றாம் பரிசு - ரூபா. 2500
செல்வி சர்மிலா சந்திரதாசன்
சித்திரம் வடிவமைப்பும் – 4ம் வருடம்
இராமநாதன் நுண்கலைப் பீடம்

சிறப்பு பரிசு ரூபா.500 பெறுபவர்கள்

1. சிவராஜன் சிவராகவன்
   யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய
   நிறுவனம், மருதனார்மடம்
2. செல்வி தணிகாசலம் மீரா
   கல்லடி, மட்டக்களப்பு
3. திரு. பெரியசாமி கணேசராஜா
   கலஹா வீதி, பேராதனை
4. அன்ரனி குலேந்திரன்யோன் பஸ்ரியன்
   101A மொரிஸ் லேன், சுண்டுக்குளி
5. திரு. ஏரம்பமூர்த்தி நீதகுமார்
   கந்தப்பொல டிவிசன், கந்தப்பொல

யாழ் எய்ட் இன் கவிதை போட்டியில் வெற்றி பெறும் கவிஞர்கள்

முதற் பரிசு - ரூபா . 7500
யேனுக்ஷா சற்குணராசா
வட்டு கிழக்கு, சித்தன்கேணி

இரண்டாம் பரிசு - ரூபா . 5000
சாருஜா சந்திரகுமார்
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி
திருகோணமலை

மூன்றாம் பரிசு - ரூபா. 2500
வைஷ்ணவி ஜெயக்குமார்
மட்/புனித சிசிலிய பெண்கள் கல்லூரி
மட்டக்களப்பு

சிறப்பு பரிசு ரூபா.500 பெறுபவர்கள்

1. செல்வி மிஷாந்தி செல்வராஜா
   49,நொத்தாரிஸ் லேன்
   அரியாலை மேற்கு
2. T. சிவனருள்
   4 Phillimore road
   Liver pool
3. தம்பிராசா பரமலிங்கம்
   17/22A நாவலடி லேன்
   யாழ்ப்பாணம்
4. வண ஜெயராசா தேவ அருட்செல்வம்
   செட்டிக்குறிச்சி, பண்டதரிப்பு
5. கவிப்பிரியன்
   Savnlinna, Finland

நலிவுற்ற மாணவர்களிற்கு உதவுவதற்காக கலிங்கத்திற்கு அன்பளிப்பு செய்தோர் விபரம்

ஜெ.ஜெயக்காந்தன் (நோர்வே)	-	ரூபா 20,000
இராசேந்திரக்குருக்கள்	-	ரூபா 20,000
ஆர். சந்திரகாந்தன் (ஜெயபதி, கொக்குவில் மேற்கு)	-	ரூபா 15,000
ஆர்.நாகவரன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்)(வருடாந்தம்)	-	ரூபா 5,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பாரதி

வெளியீடு

YARL BARATHY

தரம் 01 முதல் தரம் 09 வரை அலகு ரீதியிலான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு தவணைக்கும் எம்மால் வெளியிடப்படுகின்றன.

நிண்டதொரு எதிர்காலத்திற்காய்...என்றும் நாம் உங்களுடன்.

" முயற்சி செய் பயிற்சி செய் தானாக வரும் உயற்சி "

தரமான கருத்தியல் ஆசிரியர்களின் தரமான வெளியீடு - யாழ் பாரதி

தொடர்புகளுக்கு :

யாழ் பாரதி வெளியீட்டகம், அளவெட்டி தெற்கு.

T.P 0770872309, 0774499795

Email Add : www.Yarlbarathypub@gmail.com

S.S MOTORS

154, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
021 4923685

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்ரி குட்டியும் ஸ்மார்த்த

ஆண் இனம் கடந்து வந்த பாதை பஞ்சு மெத்தை நிறைந்த மென்மையான பாதையல்ல, கல்லும் முள்ளும் கொடிய ஐந்துகளும் நிறைந்த கரடு முரடான பாதையாகும். இவற்றைக் கடந்து வந்து தான் இன்று பெண்கள் மகத்தான சாதனைகளைப் படைக்கின்றனர். அந்த வகையில் யாழ்ப்பாணக் கலாச்சாரத்துடன் நெருங்கிய தொடர்புடைய மலையாள சமுதாயத்தில் இருந்து ஆணாதிக்கத்திற்கு எதிராக கொடுக்கப்பட்ட முதலாவது குரலாக பேசப்படுவது குறியேடத்து தாத்ரி.

பாலியல் குற்றஞ்சாட்டப்பட்டு சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்ட தாத்ரி ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு விதமாகப் புரிந்துகொள்ளப்பட்டவள்.

நூற்றாண்டின் ஆரம்பத்தில் நெறி தவறிய காமக் குற்றவாளி. பின்னர் ஆணாதிக்க வெறிக்கு இரையான அப்பாவி. இன்று பெண்ணுரிமையின் முதல் மலையாளிக் குரல். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பிறந்து அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து மறைந்த குறியேடத்து தாத்ரி கேரள சமூக வரலாற்றில் இன்றும் வாழ்கிறாள். ஆண் மேலாதிக்கம் அதன் எல்லாவிதமான பிற்போக்குக் குணங்களுடனும் பரவியிருந்த சமுதாயத்தில் ஓர் அபலைப் பெண் தனது உடலையே ஆயுதமாக்கி நடத்திய கலகம், குற்றஞ்சாட்டியவர்களையே குற்றவாளிகளாக்கியது. அன்றைய சமூகக்கட்டுப்பாடுகளையும் அநீதியையும் சவாலுக்கு அழைத்த தாத்ரி விரட்டப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் இறுதிக் காலங்களில் அவளுக்கு என்ன நேர்ந்தது என்று புறவுலகுக்குத் தெரியவில்லை. ஆனால் தாத்ரியின் முடிவிலிருந்து தான் கேரள சமூக வாழ்க்கையின் மறுமலர்ச்சிக் காலத்தின் முக்கியமான அத்தியாயங்களில் ஒன்று ஆரம்பமானது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கேரளத்தில் நிலவிய மேற்சாதி ஒழுக்க விதிகள் பெண்ணை போகச் சரக்காக மட்டுமே கையாண்டன. பிற ஆணுடன் தொடர்புகொண்டிருந்த பிழைக்காக தாத்ரிக்குட்டி என்ற நம்பூதிப் பெண்மீது விசாரணை நடத்தி சமூக விலக்கு கற்பிக்கப்பட்டது.இந்த சம்பவம் நடந்தது 1905 இல். அந்த சமுதாய விசாரணையின் நோக்கத்தையும்

- நூற்றாண்டைக் கடந்த உருக்கும் உண்மை -

விசாரமும்

நடைமுறையையும் விளைவுகளையும் அறிந்துகொள்ளும் முன்பு அந்தக்காலத்தின் பண்பாட்டுச் சூழலையும் ஆண்-பெண் உறவுமுறையின் இயல்பையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்று ஒருங்கிணைந்த மாநிலமாகவுள்ள கேரளம் ஆரம்பத்தில் மூன்று முக்கிய நிலப்பகுதிகளாகப் பிரிந்திருந்தது. வடக்குப் பகுதி மலபார். மத்தியப் பகுதி கொச்சி சமஸ்தானத்துக்கு உட்பட்டது. தென்பகுதி திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆளுகையிலிருந்தது. ஆனால், மூன்று பிரதேசங்களிலும் கலாச்சாரக் கட்டுமானம் மட்டும் பொதுவான தன்மைகொண்டிருந்தது. சமுதாயத்தில் ஆணின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது.பெண்களும் கீழ்ச்சாதியினரும் வளர்ப்பு விலங்குகளாகவே பராமரிக்கப்பட்டனர்.

இந்தக் கொடுமைக்கு எதிரான முதல் போராட்டம் 1859 இல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடந்தது. (இதனைப்பற்றி இன்னுமோர் பரணியில் பார்க்கலாம்)பிற்பட்ட வகுப்பினராக ஒதுக்கப்பட்ட சாணார் இனத்தவர் தங்களது பெண்கள் மார்பை சீலையால் மறைத்துக்கொள்ள உரிமைகோரிப் போராடி வெற்றி பெற்றனர். பெண்ணின் மானம் என்பது அடிப்படையில் ஆணின் மரியாதையும் சமூகத்தின் கௌரவமும் மானிட மதிப்பீடுகளின் தேவையும் என்று உணரவைத்த போராட்டம் அது. ஆனால் அதே காலப்பகுதியில்தான் கேரள சமூக அமைப்பின் மேல்தட்டிலிருந்த உயர்யாதியான நம்பூதிரி சமுதாயம் பெண்களை அடுப்படிக்குள் வேகவைத்துக்கொண்டிருந்தது. வெளி உலகில் பரவலாகியிருந்த மாற்றத்தின் அதிர்வுகள் நம்பூதிரி இல்லங்களில் நுழைய அனுமதிக்கப்படவில்லை. நிலவுடைமை பிடிநழுவாமலிருக்கவும் பிராமணீய அதிகாரம் பறிபோகாமலிருக்கவும் காபந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கலாச்சார ஆதிக்கத்தை வலுவாக்க விதிகள் இறுக்கப்பட்டன. அந்த இறுக்கத்தில் நம்பூதிரிப் பெண்கள் நெரிபட்டனர்.

நம்பூதிரி இல்லங்களில் மூசாம்பூரி என்று அழைக்கப்படும் மூத்த நம்பூதிரி மட்டுமே திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுவார். அவருக்கு இளையவர்களான நம்பூதிரிகள் கோவில் ஊழியக்காரர்களான அம்பலவாசிகளின் வீட்டுப் பெண்களையோ நாயர் தறவாட்டுப் பெண்களையோ சம்பந்தம் செய்துகொள்ளலாம். சொத்துக்கள்மீதும் பெண்கள்மீதும் முழு அதிகாரமுள்ள மூசாம்பூரி வயதைப் பொருட்படுத்தாமல் எட்டோ, பத்தோ பெண்களை "வேளி " (கல்யாணம்) நடத்திக் கொள்வார். விளைவு ? குழிக்குப் போகிற பிராயமுள்ள நம்பூதிரிக்கு முந்தா நாள் பூப்படைந்த மணப்பெண். நம்பூதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லங்கள் உதாசீனம் செய்யப்பட்ட பெண்களால் நிரம்பிய இருண்ட தொழுவங்களாக நின்றன.

திருமணம் என்ற பெயரால் இல்லத்தில் அடைக்கப்பட்டவர்களின் சக்களத்திப் போர், நிறைவு செய்யப்படாத பாலியல் வேட்கை ஆகியவை பெண்களை முடக்கின. இளம் விதவைகளின் பெருமூச்சுகளால் இல்லத்தின் அகாயிகள் (உள் அறைகள்) தீச்சூளைகளாயின. மணமாகாத நம்பூதிரிப் பெண்கள் (நம்பூதிரிப் பெண்களுக்கு அந்தர்ஜனம் என்று பெயர்) கனவுகளையும் ஆசைகளையும் விழுங்கி கன்னியராக முதிர்ந்தனர். கூந்தல் நரைத்து, உடல்குன்றி சாவுக்காகக் காத்துக் கிடந்தனர். அப்படி இறந்துபோகும் முதிர்கன்னிகளால் குலத்துக்கு சாபம் வந்து விடாமலிருக்க அந்த பிணத்துடன் உடலுறவுகொள்ள வெளியிலிருந்து கீழ்ச்சாதிக்காரர்களான "நீசர்கள் " அமர்த்தப்பட்டனர். இந்த தோஷ பரிகாரம் "நீச கர்மம் " என்று அழைக்கப்பட்டது. பண்பாட்டு விதிகளில் ஆண்களுக்கு நிரந்தர சலுகையிருந்தது. ஒரு நம்பூதிரிப் பெண் அந்நிய ஆடவனுடன் தொடர்புகொண்டால் அவள் களங்கப்பட்டவள். அவள் மீது சமுதாய விசாரணை நடத்தப்படும். இந்த விசாரணைக்கு "ஸ்மார்த்த விசாரம் " என்று பெயர். நம்பூதிரி கிராமசபைகளின் நடவடிக்கைகளைச் செய்யும் ஸ்மார்த்தர்களும் மீமாம்சகர்களும் அடங்கிய குழு அந்தர்ஜனத்தின் ஒழுக்கக்கேட்டை விசாரிக்கும். அதற்குத் தோதாக குற்றம் சாட்டப்பட்ட பெண் தனியறையில் அடைக்கப்படுவாள். உறவினர் எவரும் அவளை நெருங்கவோ உணவோ தண்ணீரோ கொடுக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள். இருண்ட அறையில் ஒண்டிக்கிடக்கும் "குற்றவாளிக்கு அவளுடைய தாசி(பணிப்பெண்) மட்டும் உதவலாம். காமக்குற்றம் சாட்டப்பட்ட பெண் "சாதனம் " என்று அழைக்கப்பட்டாள். சாதனம் தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்ய பலவிதமான உபாயங்கள் பிரயோகிக்கப்பட்டன. பாயோடு சுருட்டிக்கட்டி மாளிகையின் மேலிருந்து அவளை எறிவது ஒருமுறை. அவளை அடைத்து வைத்திருக்கும் அறைக்குள் விஷ ஜந்துக்களை விடுவது இன்னொரு உபாயம். இந்த தண்டனைகளிலிருந்து தப்பினால் அவள் நிரபராதி. ஆனால் அப்படி யாரும் தப்பியதில்லை. விஷப் பிராணிகளுக்கு ஒழுக்க விதிகள் பற்றிய ஞானமில்லாததே காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கப்பட்டிருக்கும் "சாதனத்தை ஸ்மார்த்தர்களின் பஞ்சாயத்து விசாரிக்கும்.உயிர் வற்றி உடல் ஒடுங்கிய சாதனம் பெரும்பாலும் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்.தன்னைப் போகித்தவன் யார் என்று சொல்லிவிடும். அத்துடன் சாதனம் இல்லத்திலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் விலக்கப்படும். இல்லத்திலிருந்து வெளியேற்றி கதவை அடைத்து பிண்டம் வைக்கப்படும். நீத்தாருக்கான சடங்கு அது.இனி அவள் உயிரற்றவள். இறந்தவள். இல்லத்திலிருந்து எறியப்பட்ட சாதனத்தை பிரம்மனின் சந்ததிகளல்லாத எந்த நீசனும் பொறுக்கிக்கொள்ளலாம்.ஆனால் அதற்கு யாரும் முன்வந்ததில்லை. தொழில் அதிகாரத்தை வைத்திருக்கும் மேற்சாதியுடன் மோதிக்கொள்ளத் துணிந்ததில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் எண்பதுகளில் அரங்கோட்டுக் கரையில் கல்பகசேரி இல்லத்தில் அஷ்டமூர்த்தி நம்பூதிரியின் மகளாகப் பிறந்தவள் சாவித்திரி. பிடிவாதக்காரக் குழந்தையாக வளர்ந்தாள். பெண்கள் கல்வி கற்பது ஆசாரத்துக்கு ஒவ்வாததாகக் கருதப்பட்ட காலத்தில் அருகிலிருந்த குருகுலத்தில் படிக்க அந்தப் பிடிவாதம் துணைசெய்தது. தர்க்க புத்தியுடனும் சுதந்திர வாஞ்சையுடனும் வளர்ந்த பெண் பூப்படைந்தபோது தீச்சுடரின் அழகுடன் ஒளிர்ந்தாள். உடல் மலர்வதற்கு முன்னும் உடல் மலர்ந்த பின்னும் அவளை மோகித்து கலந்தவர்கள் பலர் என்று செவிவழிக் கதைகள் சொல்கின்றன. தாத்ரியை வேளி முடித்து அனுப்பியது குறியேடத்து இல்லத்துக்கு. அவ்வாறு வெறும் சாவித்திரிக் குட்டி குறியேடத்து தாத்ரியாகிறாள்.

அவளை மணந்தவர் குறியேடத்து இல்லத்தை சேர்ந்த இரண்டாம் சந்ததியான ராமன் நம்பூதிரி. இந்த மணஉறவில் ஒரு சதி மறைந்திருந்தது. நம்பூதிரிக் குடும்பங்களில் மூத்தவரான மூசாம்பூரிக்கு மட்டுமே திருமணம் செய்துகொள்ளும் உரிமை.இரண்டாமவரான அப்பன் நம்பூதிரி திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்றால் வேத விதிப்படி ஒரே ஒரு வழியிருந்தது. மூசாம்பூதிரியால் தாம்பத்தியத்தில் ஈடுபட்டு வாரிசை உற்பத்தி செய்ய முடியாமலிருந்தாலோ தீராத நோயிருந்தாலோ அவரது அனுமதியுடன் வைதிகமுறைப்படி பரிகாரங்கள் நடத்திய பின்பு இரண்டாமவர் மணமுடித்துக் கொள்ளலாம். குறியேடத்து நம்பியாத்தன் நம்பூதிரி தீராத நோயாளியாக இருந்தார்.அதனால் ராமன் நம்பூதிரிக்கு தாத்ரியை மணந்துகொள்ள முடிந்தது. ஆனால் முதலிரவில் அவளுடன் உறவுகொண்டவர் மூசாம்பூதிரி. தாத்ரியின் கனவுகள் பொசுங்கின. மனம் துவண்டது.உடல் களவாடப்பட்டது. அந்த கொடூர நொடியில் தாத்ரி வெஞ்சினப் பிறவியானாள்.தன்னை வஞ்சித்தவர்களைப் பழிவாங்க தனது உடலை ஆயுதமாக்கினாள். அவளது மாமிசப் பொறியில் பல ஆண்கள் சிக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்ரியின் துர்நடத்தை ஊர்ப்பேச்சாக மாறியது.கொச்சி சமஸ்தானத்தின் ராஜா விசாரணைக்கு அனுமதியளித்தார். தாத்ரியை முன்னிருத்திய ஸ்மார்த்த விசாரம் நாற்பது நாட்கள் நீண்டது. தன்னைக் காமப்பிழைக்கு ஆளாக்கியவர்களைப் பற்றி முப்பத்தியொன்பது நாட்கள் எதுவும்பேசாமலிருந்தாள் தாத்ரி. அப்படிப் பேசாமலிருப்பது ஒருதலைப்பட்சமான தீர்ப்பில் முடியும். தான்மட்டுமே குற்றத்தின் பாரத்தைச் சுமக்கவேண்டியிருக்கும் என்ற உள்ளுணர்வில் நாற்பதாம் நாள் தன்னோடு கிடந்தவர்களை அடையாளம் காட்டினாள்.அவள் பகிரங்கப்படுத்திய வரிசையில் அறுபத்தி நான்கு புருஷர்களின் பெயர்கள் இருந்தன.அறுபத்தி ஐந்தாவது பெயரைச் சொல்வதற்கு முன்பு பணிப்பெண்ணிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்து சபையில் காட்டச் சொன்னாள். "இந்தப் பெயரையும் சொல்லவேண்டுமா ? " என்று அவள் கேட்டதும் ஸ்மார்த்தனும் மீமாம்சகனும் மகாராஜாவும் அதிர்ந்து நடுங்கினர்.அந்த நொடியில் ஸ்மார்த்த விசாரம் முடிந்தது. தாத்ரியுடன் உறவுகொண்ட அறுபத்தி நான்கு ஆண்களும் விலக்கு கற்பித்து நாடு கடத்தப்பட்டனர். தாத்ரிக் குட்டிக்குப் பிண்டம் வைக்கப்பட்டது. அவளுடைய முதுகுக்குப் பின்னால் மரண ஓலத்துடன் கதவு அறைந்து மூடப்பட்டது. அவள் இறந்துபோனவர்களில் ஒருத்தியாகக் கருதப்பட்டாள்.

தாத்ரி வெளிப்படுத்திய அறுபத்தி நான்கு பெயர்களில்எல்லா வயதினரும் இருந்தனர். உறவினர்கள் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள், அண்டை வீட்டவர் கள்,கல்வி கற்பித்த குரு, இல்லத்துக்கு வந்து போன இசைவாணர்கள், கதகளிக் கலைஞர்கள் என்று எல்லா ஆண்களும் இருந்தனர். அதிர்ச்சியளிக்கும் விதத்தில் பெற்ற தகப்பனின்பெயரும் உடன்பிறந்த சகோதரனின் பெயரும் இருந்தன. தாத்ரி சொன்னவர்களில் பாதி அவளை வீழ்த்திய வரகள். மறுபாதி அவளால் வீழ்த்தப் பட்டவர்கள்.அவள் சொல்லாமல்விட்ட அறுபத்தி ஐந்தாவது பெயர் கொச்சி மகராஜாவின் பெயர் என்றும் ராஜாவுக்கு நெருக்கமுள்ள நபரின் பெயர் என்றும் நிரூபணம் செய்யப்படாத ஊகங்கள் நிலவின. இன்றும் அது விடுவிக்கப்படாத புதிர். குறியேடத்து தாத்ரி சம்பவத்துக்கு முன்பும் அந்தர் ஜனங்கள் பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வாயில்லாப் பிராணிகளாக தண்டனையை ஏற்றுக் கொண்டு மடிந்து காலத்தின் புழுதியாக அவர்கள் மறைந்தனர். தாத்ரி குட்டி மட் டுமே எதிர்விசாரணைக்குத் தயாரானவள். தன்மீது சுமத்தப்பட்ட குற்றத்தின் மறு பக்கத்தை அம்பலப்படுத்தி தார்மீக உறுத் தலை உண்டாக்கியவள். ஆணாதிக்க மனோபாவத்தையும் பெண்ணுக்கு விரோத மான சாதியொழுக்க விதிகளையும் கேலிக்குள்ளாக்கியவள். எந்த உடல் பாவக்கறை படிந்தது என்று உதாசீனமாகச் சொல்லப்பட்டதோ அதே உடலை ஆயுதமாக தாத்ரி மாற்றினாள். எந்த ஒழுக்க விதிகள் தன்னைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்தனவோ அதேவிதிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பிரதிவாதமாக்கினாள். "குலப் பெண்ணுக்குத்தான் பிரஷ்டம். எப்போது ஒரு குலப்பெண்ணை நடத்தை கெட்டவள் என்று தீர்மானிக்கிறீர்களோ அப்போதே அவள் அந்தத் தகுதியிலிருந்து கீழே தள்ளப்பட்டு வேசியாகிறாள். வேசியின் தர்மத்தைக் கேள்வி கேட்கவோ அவளைத் தண்டிக்கவோ ஸ்மார்த்த சபைக்கு என்ன அதிகாரம் ? " என்ற தாத்ரியின் கேள்வியில் அன்று மிரண்ட சமுதாயம் பின்னர் ஸ்மார்த்த விசாரம் நடத்தவில்லை. நாடு கடத்தப்பட்ட அறுபத்து நான்கு ஆண்களில் ஒருவரைத் தவிர யாரும் பின்னர் சொந்த மண்ணுக்குத் திரும்பவில்லை. கதகளிக் கலைஞரான காவுங்ஙல் சங்கரப்பணிக்கர் மட்டும் சமுதாயவிலக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். தன்னை நாடுகடத்திய ராஜாவிடமிருந்து கலைக்காகப் பரிசு பெறுவதை சபதமாகக்கொண்டு தீவிர சாதகத்தில் ஈடுபட்டார். நாடுகடத்தப்பட்டவருக்கு மேடைகள் மறுக்கப்பட்டன. ஒருவேளைச் சோறோ ஒரு மிடறு நீரோ தலைசாய்க்க ஒரு திண்ணையோ அகப்படாமல் அலைய நேர்ந்தது.எனினும் சங்கரப் பணிக்கர் தளரவில்லை. அறுவடை முடிந்த வயல்வெளிகளை அரங்காக்கி கதகளி நிகழ்ச்சிகளை நடத்தினார். புரவலர்களல்லாத சாமானிய மக்கள் அவருக்கு ஆதரவளித்தனர்.அதுவரை கோவில்களின் கூத்தம்பலங்களிலும் நம்பூதிரி இல்லங்களிலும் தனி ரசனைக்குரிய கலையாக இருந்த கதகளி அவரால் பொது ரசனைக்குரிய ஊடகமானது. அந்தக் கலைஞரின் மறு அரங்கேற்றத்துக்கு கடும் எதிர்ப்புகள் எழுந்தன. கடைசியில் எந்த ராஜாதிகாரம் பிரஷ்டம் செய்ததோ அதே கொச்சி மகாராஜாவிடமிருந்து தனது கலைக்குரிய அங்கீகாரமாக பரிசும் பெற்றார் சங்கரப் பணிக்கர். தாத்ரி சம்பவத்தால் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்ட பலரும் அவளைச் சபித்திருக்கிறார்கள். சபிக்காத நபர் சங்கரப் பணிக்கர். இருவருக்குமிடையில் பாலியல் ஈர்ப்பை மீறிய உறவு உருவாகியிருந்தது. ஒரு கலைஞனுக்கும் ரசிகைக்குமான உறவு.

ஸ்மார்த்த விசாரம் நடத்தி பிரஷ்டு கற்பிக்கப் பட்ட குறியேடத்து தாத்ரிக்கு என்ன ஆயிற்று என்பது வாய்மொழிக் கதைகளிலிருந்தே அறியப்படுகிறது. தாத்ரி விசாரணை பற்றிய தகவல்கள் வில்லியம் லோகன் எழுதிய "மலபார் கையேட்டில் (மலபார் மானுவல்) விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் பின்கதைகள் அனைத்தும் மக்கள் பேச்சிலிருந்தே பெறப்படுகின்றன. சம்பவத்தோடு தொடர்புடைய பலரது பின் தலைமுறையினர் இன்றும் வாழ்கிறார்கள் என்ற நிலையில் வாய்மொழித் தகவல்களை பொய்யென்று தள்ளுபடி செய்வதும் தவறாகிவிடும். சமுதாயத்தால் விலக்கப்பட்ட பெண்ணைக் காப்பாற்றும் பொறுப்பு மகாராஜாவைச் சேர்ந்தது. கூடாவொழுக்கத்துக்காக தண்டிக்கப்பட்டவளை ஊர் மத்தியில் பராமரிப்பது ராஜ நீதிக்கு இழுக்கு என்பதால் புறம்போக்குப் பகுதியில் அவளுக்கான வீடும் நிலமும் ஒதுக்கப்படும். வைதீக நியதி அது. அதுபோன்று தாத்ரிக்கும் பெரியாற்றின் கரையில் மயானத்தையொட்டி இடம் ஒதுக்கப்பட்டது. அங்கே அவள் வாழ்ந்ததற்கான சான்றுகளில்லை. 1905 இல் இறந்துபோகவில்லை என்பது மட்டும் நிச்சயம். முன் காலங்களில் பிரஷ்டம் செய்யப்பட்ட பிற பெண்களைப்போல தாத்ரியும் பாண்டிதேசத்துக்கு -தமிழ்நாட்டுக்கு- அடைக்கலம் தேடிப் போனாள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரம். தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆங்கிலோ- இந்தியர் ஒருவரை மணந்து மூன்று பிள்ளைகளுக்குத் தாயுமாகியிருக்கிறாள். இரண்டு பெண்களும் ஓர் ஆணும். மகள்களில் ஒருத்தி பாலக்காட்டிலும் மற்றொரு மகளும் மகனும் சென்னையிலும் வாழ்ந்தார்கள்.சென்னைவாசியான மகள்வழிப் பேத்தி நடிகையாக அறிமுகமாகி மலையாளத் திரையில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக நட்சத்திரமாக ஜொலித்திருக்கிறாள். அறுபத்தைந்து பேருடன் உடலுறவு கொண்டும் கர்ப்பமடையாத தாத்ரி மூன்று குழந்தைகளுக்குத் தாயானது உயிரியல் விந்தையா ? மனதின் தந்திரமா ? என்பது இன்றும் தெளிவாகாத ரகசியம்.

வெறும் காமப் பிசாசு என்று சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் உதாசீனத்துக்குள்ளான ஒரு பெண் நூற்றாண்டு கடந்தும் நினைக்கப்படுவதன் காரணம்?ஆணாதிக்க அடக்கு முறைக்கு எதிராக கிளர்ந்து எழுந்து மரபு வழிப் பண்பாட்டையே ஆட்டம் காணச் செய்தமையே. எனவே யாழ்ப்பாணத்துப் பெண்களாகிய நாமும் பெண்களுக்கு எதிராக நடாத்தப்படும் அநீதிகளுக்கு எதிராக பத்திரிகைகளில் அறிக்கை கொடுப்பதோடு மாத்திரம் நின்று விடாமல் ஆக்க பூர்வமாக செயலாற்ற எழுச்சி கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விடை பெறுகிறேன்

ரிஸானாவின் மரணதண்டனை ஓலம் அடங்குவதற்குள்ளேயே மற்றுமொரு அவலக் குரல் அது இந்திய நாடாளுமன்ற தாக்குதலுக்கு சூத்திரதாரியாக விளங்கிய அப்சல் குருவின் அவலக் குரல் தான் அது ஆம். நான் "விடை பெறுகிறேன்" தூக்கிலிடுவதற்கு சில நொடிகளுக்கு முன் முன்னால் மருத்துவக் கல்லூரி மாணவனான அப்சல் குரு உதிர்த்த வார்த்தைகள். அப்சல் குருவின் இறுதி கணங்கள் பற்றி பெயர் சொல் விரும் பாத சிறைச்சாலை ஊழியர் சொன்ன தாவது :

அப்சல் குருவின் உயிர் ஒரு நிமிடத்தில் பிரிந்தது . ஆனால் சிறைச் சாலையின் விதி முறைப்படி அரை மணி நேரம் உடலை தொங்கவிட வேண்டும். அதன் பின் அவரது உடல் இஸ்லாமிய சடங்குகளுடன் திகார் சிறை எண் 3 அருகே புதைக்கப்பட்டது . காஷ்மீர் பிரிவினைவாதி மக்பூல் பட் கல்லறையின் அருகே அப்சல் குருவின் உடலும் புதைக்கப்பட்டது.

ஆனாலும் இவர்கள் இருவருக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் இருந்தன . அப்சல் காஸ்மீர் பிரிவினை பற்றி பேசியது இல்லை . தான் விரும்பாமல் இந்த விடயத்தில் தன்னை தேவை இல்லாமல் இழுத்து வந்து விட்டார்கள் என்று கூறுவார் . மேலும் இந்தியாவில் ஊழல் ஒழியவேண்டும் என்று விரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் உள்ள வெகுமக்கள் , இந்து ஆதரவாளர்கள் அப்சல் குருவின் தூக்கை வெடிவைத்து கொண்டாடினாலும் , சிறைச்சாலை வளாகம் அமைதியாகவே காணப்பட்டது. சிறை ஊழியர்கள் பலரும் வருத்ததுடன் காணப்பட்டனர் . காரணம் அப்சல் குருவை தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லும் பொது அவர் எல்லோரின் பெயரையும் குறிப்பிட்டு தான் விடை பெறுகிறேன் என்று சொல்லியவாறு நகர்ந்தார்.

அவர் உண்மையாக தனது மார்க்கத்தை நேசிப்பவர் மிகவும் கண்ணியமாக நடந்து கொள்பவர் . தூக்கிடுவதற்கு முன் ஒன்றே ஒன்று தான் அவர் கேட்டுக் கொண்டார். "அதிக வலி அறியமுடியாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள் " என்றார் . அப்படியே பார்த்துக் கொள்கிறேன் என்ற உறுதி அளித்து அப்சல் குருவின் கண்களை உற்று நோக்கியவாறு கருப்பு துணியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து அவரது முகத்தை மூடினார் சிறைச்சாலை ஊழியர் . பின்பு மரணத்தை நோக்கிய அப்சல் குருவின் பயணம் இனிதே நிறைவேறியது . பலரும் நினைப்பது போல் அப்சல் குருவின் தூக்கு தண்டனை நிறைவேற்றம் குறித்து அவருக்கு ஒரு நாள் முன்பு தெரிவிக்கப்படவில்லை . தண்டனை வழங்கப்பட்ட அன்று இரவில் தான் தெரிவிக்கப்பட்டது. இது பற்றி தெரிவிக்கப்பட்ட போது சற்று கலக்கமான நிலையில் இருந்தவர் அறையில் பல தடவை நடந்து திரிந்தார். பின்னர் 2 மணிநேரம் உறங்கி இருப்பார்.

அன்று காலையில் அப்சல் குரு தேநீர் மட்டுமே அருந்தினார் . அவருக்கு உணவு வழங்கப் படவில்லை . குளித்துவிட்டு வெள்ளை ஆடை உடுத்தி தொழுகை நடத்தினார் .

"இது வரை திகார் சிறைச் சாலை 25 க்கும் மேற்பட்ட தூக்கு தண்டனைகளை நிறைவேற்றி உள்ளது . எங்கள் அனுபவத்தில் 10 நபர்களுக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றி உள்ளோம் . ஆனால் நாங்கள் அப்சல் குருவைப் போல் , மரணம் தனக்கு வருவதை அறிந்தும் இவ்வளவு அமைதியும் அடக்கத்தையும் கட்டிக் காத்த மனிதரை பார்த்ததில்லை "

கடைசி இரண்டு மணி நேரத்தில் அப்சல் குரு சிறைத் துறை அதிகாரிகளுடன் பேசிக் கொண்டிருந்தார் . அவர் வாழ்வும் மரணமும் பற்றி அவருடை கருத்துகளை முன்வைத்தார். உலக சகோதரத்துவம் , ஒருமைப்பாடு , மனித நேயம் குறித்து பேசினார் . எந்த மனிதனும் தீயவன் அல்ல , எல்லா உயிர்களும் ஆண்டவனால் படைக்கப்படுகிறது . நாம் உண்மையின் பாதையை தேர்ந்தெடுத்துச் செல்ல வேண்டும் . அது தான் உண்மையான சாதனை என்று விளக்கினார் . ஒரு புத்தகத்தில் அவரது சிந்தனையை எழுதி தேதி குறிப்பிட்டு கையெழுத்தும் இட்டார் .

சிறை அதிகாரிகள் அவரது குடும்பத்தை இனி யார் பார்த்துக் கொள்வார்கள் என்ற கேள்வியை அவரிடம் எழுப்பினார்கள் . அதற்கு அவர் , கடவுள் தான் எல்லா உயிர்களையும் பார்த்துக் கொள்கிறார் . ஆகவே எனது குடும்பத்தையும் அவரே பார்த்துக் கொள்வார் என்றார் .

அவரின் பலமே ஆன்மீகம் தான் . அப்சல் நன்கு படித்தவர் . இஸ்லாம் மற்றும் இந்து மதத்தை நன்கு அறிந்தவர் . இரு மதங்களுக்கும் இருக்கும் ஒற்றுமையை அடிக்கடி சொல்வார் . சில காலங்களுக்கு முன் இந்து மதத்தினரின் புனித நூலான நான்கு வேதங்களையும் படித்துள்ளார் . வேத நெறியை பின்பற்றும் இந்துக்கள் எத்தனை பேர் நான்கு வேதங்களும் படித்துள்ளனர். ஒரு நல்ல ஆன்மா நம்மை விட்டு விலகும் போது நமக்கு அது பெரும் சோகத்தை விட்டுச் செல்கிறது என்றார் சிறை ஊழியர் .

இதற்கு முன் தூக்கு மேடைக்கு செல்லும் கைதிகள் நடுங்கிய படி தான் செல்வார்கள் . ஆனால் அப்சல் குரு அமைதியாக மகிழ்ச்சியாக முகத்தில் சோகம் இல்லாது ஒரு புன்னகையுடன் தான் தூக்கு மேடைக்கு சென்றார். அந்த புன்னகைக்கு பின்னால் ஆயிரம் பொருள் இருந்திருக்கும் .

மற்ற கைதிகளை தூக்கு மேடைக்கு கொண்டு செல்லும் போது , அவர்கள் பொதுவாகவே மதத்தை குறித்தும் அவர்கள் சார்ந்த அரசியல் சித்தாந்தம் குறித்தும் புலம்பிய படியே செல்வார்கள் . ஆனால் அப்சல் குரு , எவ்வகையிலும் புலம்பவில்லை . தன்னுடைய அறையில் இருந்து சுமார் நூறு அடி தூரம் வரை இருந்த தூக்கு மேடைக்கு செல்லும் வரை சுற்றி இருந்த அனைவருக்கும் தனது வாழ்த்துக்களை சொல்லியபடியே நகர்ந்தார். இப்படி ஒரு மனிதரை இனி திகார் சிறை பார்ப்பது அரிது தான் . அநியாயமாக ஒரு நல்ல ஆத்மா அரசியல் கோமாளிகளால் அழித்தொழிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLF IPL 2013

IPL திருவிழா

6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6-வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 3-ந்தேதி முதல் மே 26-ந்தேதி வரை நடக்கிறது. இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடைபெறும் இந்தப்போட்டியில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் உள்பட 9 அணிகள் பங்கேற்கின்றன. இந்தப்போட்டிக்கான வீரர்கள் ஏலம் சென்னை கிண்டியில் உள்ள ஐ.டி.சி கிராண்ட் சோழா ஓட்டலில் இடம் பெற்றது

ஐ.பி.எல். சேர்மன் ராஜீவ் சுக்லா ஏலத்தை தொடங்கி வைத்தார். லண்டனை சேர்ந்த ரிச்சர்டு மேட்லி ஏலத்தை நடத்தினார். இந்தியா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, வெஸ்ட் இண்டீஸ், இலங்கை, நியூசிலாந்து ஆகிய நாடுகளை சேர்ந்த 108 வீரர்கள் ஏலப்பட்டியலில் இடம் பெற்று இருந்தனர்.

ஐ.பி.எல். கிரிக்கெட் வீரர்களின் யாரும் எதிர்பார்க்காத வகையில் ஆஸ்ட்ரேலிய இளம்வீரர் மேக்ஸ்வெலுக்கு அதிக மவுசு இருந்ததால் ரூ.5.31 கோடிக்கு ஏலம் போனார். ஆனால் இதில் சோகம் என்னவென்றால் 71 வீரர்களை யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. இதில் முக்கியமானவர்கள் ஆஸ்ட்ரேலியா வீரர் போலிஞ்சர், தென் ஆப்பிரிக்கா வீரர் கிப்ஸ்.

சென்னை சூப்பர் கிங்ஸ், நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ் உள்பட 9 அணிகள் பங்கேற்கும் 6வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 3ஆம் தேதி முதல் மே 26ஆம் தேதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது. இந்த போட்டிக்கான புதிய வீரர்களின் ஏலம் சென்னை கிண்டியில் உள்ள ஐ.டி.சி. கிராண்ட்சோழா ஓட்டலில் நடந்தது. 9 அணிகளின் சார்பில் அதன் நிர்வாகிகள் மற்றும் ஆலோசகர்கள் ஏலத்திற்கு வந்தனர்.

100க்கும் மேற்பட்டோர் இடம் பெற்றிருந்த ஏலப்பட்டியலில் முதல் வீரராக ஓய்வு பெற்ற ஆஸ்ட்ரேலிய முன்னாள் கேப்டன் 38 வயதான ரிக்கிபாண்டிங்கின் பெயர் வாசிக்கப்பட்டது. முதலில் அவரை எந்த அணிகளும் வாங்க முன்வர வில்லை. இதையடுத்து அவர் விற்பனையாகாத வீரர் என்று ஏலத்தை நடத்திய ரிச்சர்ட் மேட்லி அறிவித்தார். சிறிது நேரத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி அவரை ஆரம்ப விலையான ரூ.2 கோடியே 12 லட்சத்திற்கு கேட்டது. வேறு யாரும் அவரை ஏலம் கேட்காததால் அவர் அதே விலைக்கு மும்பை அணிக்கு ஒதுக்கப்பட்டார்.

எதிர்பார்ப்பை ஏற்படுத்திய ஆஸ்ட்ரேலிய கேப்டன் மைக்கேல் கிளார்க்கை வாங்குவதிலும் பெரும்பாலான அணிகள் தயக்கம் காட்டின. அவரது தொடக்க விலையாக நிர்ணயிக்கப்பட்டி ருந்த ரூ.2.12 கோடிக்கு புனே வாரியர்ஸ் அணி கேட்டது. வேறு யாரும் முன்வராததால் அவரை புனே அணி அதே விலைக்கு ஏலத்தில் எடுத்தது. இந்த ஏலத்தில் மூக்கின் மீது விரலை வைக்கும் அளவுக்கு வியக்க வைத்தவர் ஆஸ்ட்ரேலிய இளம் வீரர் கிளைன் மேக்ஸ்வெல் தான். ஆஸ்ட்ரேலியாவின் ஆல்ரவுண்டராக ஜொலிக்க தொடங்கியுள்ள அவரது தொடக்க விலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்பை இந்தியன்சும், ஹைதராபாத் சன் ரைசர்சும் கடுமையாக மல்லுக்கட்டி நின்றன. மாறி மாறி இரு அணிகளும் அவரது விலையை உயர்த்திக் கொண்டே சென்றன. கடைசியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு வெற்றி கிடைத்தது. அவரை ஒரு மில்லியன் அமெரிக்க டாலருக்கு (இந்திய மதிப்பில் ரூ.5.31 கோடி) மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியது. இது அவரது ஆரம்ப விலையை விட ஐந்து மடங்கு கூடுதலாகும்.

கிளைன் மேக்ஸ்வெல்

இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஆர்.பி.சிங்குக்கும் ஏக கிராக்கி நிலவியது. அவரது தொடக்க விலையான ரூ.53 லட்சத்தில் இருந்து ராஜஸ்தான், பெங்களூர், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் ஏலம் கேட்டன. ஒரு கட்டத்தில் சென்னை அணி விலகிக்கொள்ள, ராஜஸ்தானும், பெங்களூரும் களத்தில் நீடித்தன. பிறகு சன்ரைசர்ஸ் அணியும் கோதாவில் குதித்து பார்த்தது. இறுதியில் ஆர்.பி.சிங்கை பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணி ரூ.2.12 கோடிக்கு தட்டிச்சென்றது.

தென் ஆப்பிக்க ஆல் ரவுண்டர் ஜோகன் போத்தாவுக்கும் நல்ல மவுசு காணப்பட்டது. அவரை தங்கள் அணிக்கு சொந்தமாக்க டெல்லி டேர்டெவில்ஸ்- புனே வாரியர்ஸ் இடையே நேரடி போட்டி நிலவியது. இதில் அவரை ரூ.2.40 கோடிக்கு டெல்லி டேர்டெவில்ஸ் வாங்கியது.

மேக்ஸ்வெல்லுக்கு அடுத்து பெரிய தொகைக்கு விலை போனவர் இலங்கை மாயாஜால சுழற்பந்து வீச்சாளர் அஜந்தா மென்டிஸ். மும்முனை போட்டிக்கு (புனே-மும்பை - கொல்கத்தா) இடையே அஜந்தா மென்டிசை ரூ.3 கோடியே 85 லட்சத்திற்கு புனே வாரியர்ஸ் அணி பெற்றது.

இந்திய வீரர்களில் ஆல் ரவுண்டர் அபிஷேக் நாயர் மீது பல அணிகளின் கவனம் ஒட்டுமொத்தமாக விழுந்தது. இந்த ரஞ்சி சீசனில் 966 ரன்கள் குவித்து 2வது இடம் பிடித்திருந்த அவரது தொடக்க விலை வெறும் ரூ.53 லட்சம் தான். ஆனால் அவரை இந்த ஐ.பி.எல்.ல் தங்கள் அணியில் விளையாட வைப்பதற்காக சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான், டெல்லி, பெங்களூர், ஹைதராபாத் சன் ரைசர்ஸ் ஆகிய அணிகள் முயற்சி மேற்கொண்டன. இதனால் அவரது விலை பல மடங்கு எகிறியது. இறுதியாக களத்தில் புகுந்த புனே வாரியர்ஸ் அணி அவரது விலையை ரூ.3.59 கோடியாக உயர்த்தி, அவரை தங்கள் வசப்படுத்தி விட்டது.
இந்த ஏலத்தில் ஜாக்பாட் அடித்த இன்னொரு வீரர் பிரபலமில்லாத ஆஸ்ட்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் கனே ரிச்சர்ட்சன். இதுவரை ஒரு சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் மட்டும் விளையாடியுள்ள அவரது அடிப்படை விலை ரூ.53 லட்சம் தான். அவரை ரூ.3.72 கோடிக்கு புனே வாரியர்ஸ் அணி வாங்கியது. அவரை போன்று தென்ஆப்பிரிக்க வீரர் கிறிஸ் மோரிசும் கணிசமான தொகைக்கு ஏலம் போனார். அவரை ரூ.3.32 கோடிக்கு சென்னை அணி வாங்கியது.
ஆஸ்ட்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் 36 வயதான திர்க் நேன்னஸ் ரூ.3.19 கோடிக்கு சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியால் வாங்கப்பட்டார். டெல்லி, பெங்களூர் அணிக்காக இதுவரை விளையாடியுள்ள அவர் இனி சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பனியனை அணிவார்.
ஆல் ரவுண்டர்களை வாங்குவதில் தான் எல்லா அணிகளும் விரும்பின. இந்த வகையில் மேற்கிந்திய தீவு அணியின் கேப்டனும், ஆல் ரவுண்டருமான டேரன் சேமியை ரூ.2.26 கோடிக்கு ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணி வாங்கியது. அவரை வாங்குவதில் பின்னடைவை சந்தித்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இலங்கை சுழற்பந்து வீச்சாளர் சென்நாயக்கேவை ரூ.3.32 கோடிக்கு தனதாக்கியது.

இந்த ஏலத்தில் மொத்தம் 37 வீரர்கள் விற்கப்பட்டனர். இவர்களின் மதிப்பு ரூ.63 கோடியாகும். புதிதாக வாங்கப்பட்ட வீரர்கள் அனைவரும் ஓர் ஆண்டுக்கு மட்டுமே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். அடுத்த சீசனில் அனைத்து வீரர்களும் மீண்டும் ஏலம் விடப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏலத்தில் 71 வீரர்கள் விற்பனையாகாததுதான் பெரும் சோகம். இந்த ஏலத்தில் மொத்தம் 216 வீரர்கள் பதிவு செய்திருந்தனர். அவர்களில் 101 பேர் இறுதிப்பட்டியலில் இடம் பெற்று, பிறகு அது 108 ஆக அதிகரிக்கப்பட்டது. இவர்களில் 37 பேர் மட்டுமே ஏலம் போனார்கள். மீதமுள்ள 71 பேரை யாரும் ஏலம் எடுக்கவில்லை.

சென்னை அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆஸ்ட்ரேலியா வீரர் போலிஞ்சர், மேற்கிந்திய தீவு வீரர் டேரன் பிராவோ, ஆஸ்ட்ரேயாவின் மேத்யூ வேட், தென் ஆப்பிரிக்காவின் கிப்ஸ், இலங்கையின் தரங்கா, ஹெராத், நியூஸிலாந்து வீரர் கப்தில், டெஸ்ட் கிரிக்கெட்டில் மிரட்டி வரும் தென் ஆப்பிரிக்காவின் வெரோன் பிலாண்டர், இங்கிலாந்து வீரர் போபரா, மேத் பிரையர் ஆகியோர் ஏலம் போகாத வீரர்கள் ஆவர்

சமீபத்தில் இங்கிலாந்து பல்கலைகழக ஆய்வில் நமது பிறந்த மாதத்தை வைத்து நமது குணநலன்களை கண்டறியமுடியும் என்று கண்டுபிடித்துள்ளனர் , இதோ நீங்கள் பிறந்த மாதத்தை வைத்து உங்களுக்கு என்னவென்று தெரிந்துகொள்ளுங்கள்...

தெரியுமா?

ஜனவரி	அமைதியை விரும்புபவர் அமைதியானவர்.
பிப்ரவரி	விட்டுக்கொடுக்கும் குணம் கொண்டவர்
மார்ச்	அறிவில் சிறந்தவர், எளிதில் கற்றுக்கொளும் திறன்
ஏப்ரல்	அதிகாரம் மிக்க ஆனால் கொஞ்சம் முட்டாள்தனம் உடையவர்
மே	அதிர்ஷ்டம் மற்றும் பிறருக்கு உதவும் குணம்
ஜூன்	அன்பானவர், போராட்டகுணம் உடையவர்
ஜூலை	பேரறிவு கொண்டவர்
ஆகஸ்ட்	சிறப்புடையவர் ஆனால் சோம்பேறி
செப்டம்பர்	ஆச்சர்யப்படும் குணம் கொண்டவர்
அக்டோபர்	கர்வம் மிக்க ஆனால் உதவும் குணம் கொண்டவர்
நவம்பர்	எல்லோரையும் அரவணைத்து செல்லும் குணம் கொண்டவர்
டிசம்பர்	புத்திசாலி ஆனால் silly

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2050 ஆம் ஆண்டை நோக்கிய விவசாயம்

இன்றைய பார்வை

ப. அருந்தவம் [ஆசிரிய ஆலோசகர்]
வலிகாமம் கல்வி வலயம்

இன்று உலகசனத் தொகை பெருக்கல் விருத்தி வேகத்தில் அதிகரித்துச் செல்கிறது. இதனால் அதிகரித்துச் செல்லும் சனத்தொகைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் விவசாயம் செய்து மக்களின் பசிப்பிணியைப் போக்க முடியாத நிலை காணப்படுகின்றது

இன்று இப் புவியில் 7 பில்லியன் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டில் 9.3 பில்லியன் பேர் வாழ்வார்கள் எனவும் வல்லுனர்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வாறு அதிகரித்த சனத்தொகைக்கும் உணவிட வேண்டிய தார்மீகக் கடைப்பாடு அனைவருக்குமுண்டு. இதன் பொருட்டு இன்று பயிர்ச் செய்கைக்கு உட்படும் நிலப்பரப்புடன், உலகின் நிலப்பரப்பளவில் 5 ஆவது பெரிய நாடான பிரேசில் நாட்டளவு பிரதேசம் முழுவதும் மேலும் வேளாண்மை செய்வதன் மூலமே மக்களின் உணவுத் தேவையை எதிர்காலத்தில் பூர்த்தி செய்ய முடியும்.

இருந்த போதிலும் இருக்கும் விவசாய நிலங்களும் விவசாய அசேதன இடு பொருட்கள் காரணமாக தமது விளைதகவை இழந்து நிற்பதையும், இயற்கை வனப் போர்வையை மனிதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமித்து அழித்து விவசாய நிலமாகவும், தனது குடியிருப்பாகவும், கைத்தொழிற் தேவையை நிவர்த்தி செய்யவும் பயன்படுத்துவதினால் இன்று பூமியில் சூழல் மாற்றமென்பது சர்வ சாதாரணமாகி விட்டதையும் காணக் கூடியதாகவுள்ளது. இச்சிக்கல் நிலைகளிலிருந்து விடுபட சரியான தீர்வு மண்ணின்றிய பயிர்ச் செய்கையாகும்.

மண்ணின்றிய பயிர்ச் செய்கை

மண்ணின்றிய பயிர்ச் செய்கையானது இற்றைக்கு பல நூற்றாண்டிற்கு முன்பே அமெரிக்காவின் அமேசன் பிரதேசம், மற்றம் பபிலோனியா, எகிப்து, சீனா, இந்தியா போன்ற பிரதேசங்களில் கையாண்டு பார்க்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இருந்த போதும் மண்ணின்றிய பயிர்ச் செய்கையில் பிரபலமாகப் பேசப்படும் "நீர்மயவூடகப் பயிர்ச் செய்கை [HYDROPONICS] *1929* இல் கலிபோர்ணியப் பல்கலைக் கழகப் பேராசிரியரான வில்லியம். எப். கிறீக் [William F.Greke] என்பவராலேயே உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

எம்மில் பலர் இன்றும் தாவரங்கள் வளர்வதற்கு மண்தான் இன்றியமையாத காரணியென எண்ணிக் கொண்டிருக்கின்றனர். மண்ணால் வழங்கக் கூடிய போசனைப் பதார்த்தத்தை செயற்கையாக வழங்குவதன் மூலமும் தாவரங்களை வளர்க்க முடியுமென்பது நாம் நிஜமாகக் கண்ட உண்மையுமாகும்.

படித்தவரெல்லாம் புத்திசாலி என்றால்!
வாருங்கள்!
உணவுற்பத்தி செய்ய,
எத்தனை தொழில் வந்தாலும்
மூன்று வேளை உணவு வேண்டு மெமக்கு,
இன்றைய தொழில் நுட்ப உலகில்
எத்தனை வேளாண்மை நவீன தொழில் நுட்பம்
எமக்கு வந்தாலும்,
அதனைக் கைகொள்வதுடன்,
எமது மரபு வழுவாத
மரபு வழி வேளாண்மையிலும்
நாம் ஈடுபட்டு,
எமது சமூகத்தை
பஞ்சம் பசி அணுகாது காக்க
விவசாயம் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின்றிய பயிர்ச் செய்கையில் நீர்மயவூடகப் பயிர்ச் செய்கை (HYDROPONICS) பிரபலம் மிக்கதாக இருந்த போதிலும் திண்ம ஊடாகப் பயிர்ச் செய்கை [SOLID MEDIA CDLTJRE] காற்றினூடாகப் பயிர்ச் செய்கை [AEROPONICS] போன்றனவும் இன்று பயன் பாட்டிலுள்ளன.

நீர்மயவூடாகப் பயிர்ச்செய்கை

இதற்கு விசேட வளர்ப்பூடகக் கரைசல் பயன்படுத்தப்படும் இக் கரைசலானது தாவரம் வளர்வதற்கேற்ற தொட்டிகள் அமைத்து அதில் ஊற்றி வளர்க்கும் முறையும் ஆழ்போசனை ஒட்டத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இவ் வளர்ப்பூடகமானது சுற்றியோடவும் விடப்படும். இதில் படத்தில் காட்டியவாறு தாவரங்கள் வளர்ந்து சிறப்பான விளைவைத் தரும்.

இலங்கையில் வளர்ப்பூடகக் கரைசலானது அல்பேட்கலவை (Albert's Solutisn) மற்றும் கலாநிதி அலன் கூப்பரின் (Dr.Alen coolier mixture) கலவை எனும் பெயர்களில் சாதாரண விவசாய இரசாயன விற்பனைக் கடைகளில் கூட வாங்கக் கூடிய நிலையுண்டு.

திண்ம ஊடகப் பயிர்ச் செய்கை

திண்ம ஊடகப் பயிர்ச் செய்கையின் போது தாவரங்கள் தம்மை நிலை நிறுத்தும் பிடிமானத்தை ஏற்படுத்த மட்டும் திண்ம ஊடகம் கருக்கிய உமி (Carbonised Rieehusk), கன்னார் (Rock Woll), தும்புச்சோறு (Coir dust), கருங்கற்துண்டு (Quary dust), சிறுகற் துண்டுகள் (Chips) போன்றவற்றில் ஒன்று பயன் படுத்தப்படும் இவ்வூடகம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தி பயிர்ச் செய்கை மேற் கொள்ளப்படும்.

காற்றூடகப் பயிர்ச் செய்கை

காற்றூடகப் பயிர்ச் செய்கையின் போது இதற்கு இசைவான செடி களை நூலில் கட்டி காற்றில் தொங்கும் படியோஃபிரத்தியேக சட்டங்கள் அமைத்து இதில் பிடி மானத்தை ஏற்படுத்தும் வண்ணம் தாவரங்கள் வளர்க்கப்படும். இங்கு தாவரம் உள்ள சூழலில் மார்கழிப் பனிப்புகார் போல் நீர்த் திவளைகள் எங்கும் பரவியிருக்கமாறு குறை வில்லாத ஈரப்பதன் தாவரச் சூழ லுக்கு வழங்கப்படும். இங்கு நீரு டன் போசணைச் சத்தும் கரைத்து கலந்து விடுவதால் தாவரங்கள் மிதமான வளர்ச்சியையும் விளை வையும் தருவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மண்ணின்றிய விவசாயம்.

இன்று அபிவிருத்தியடைந்த பல நாடுகளிலும் மண்ணின்றிய விவசாயம் சிறப்பாக நடை பெறுகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் இவ் விவசாய முயற்சி சிறப்பாக நடை பெறுகிறது.

அரிசோனாப் பாலைவனத்தில் கூட "யூரோ ஃ பிரெஷ்" எனும் காய்கறி உற்பத்தி நிறுவனம் பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிற்கு சமனான இடத்தில் தக்காளி, வெள்ளரி, மிளகாய் போன்ற பயிர்களை நீரியல் வளர்ப்புத் தொழில் நுட்ப முறையினைப் பயன் படுத்தி அடுக்குமாடி இல்லங்கள் அமைத்து பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகிறது.

செங்குத்து விவசாயமும், இல்லப் பயிர்ச் செய்கையும்.

அடுக்குமாடி வடிவில் அமைக்கப்பட்ட இல்லங்களில் ஒவ்வொரு தளத்திலும் போசணை ஊடகம் நிரப்பப்பட்ட தொட்டிகள் அமைக்கப்பட்டு பல ஏக்கர் நிலத்திற்கு சமனான இடப் பரப்பில் விவசாயம் செய்யப்படும்.

இதன் மூலம் எங்கெல்லாம் காய்கறிகளிற்கு கேள்வி மானமுண்டோ, அங்கெல்லாம் இவ்வாறான இல்லங்களில் பயிர் செய்ய முடியும். இப் போதெல்லாம் விற்பனை நிலையம் ஓர் இடத்தில் உற்பத்தியிடம் ஓர் இடத்தில் காணப்படுகிறது. எதிர் வரும் காலத்தில் விற்பனை இடத்திலேயே (நகரத்தில் கூட) அடுக்குமாடி இல்லங்கள் விவசாயம் மூலம் உற்பத்தியான உடன் விளைவை மக்கள் பெறக் கூடிய நிலையும் ஏற்படும்.

இவ்வாறான இல்லங்களில் ஆளுகை நிபந்தனையின் கீழ் மிகவும் சுத்தமான முறையில் பயிர்ச் செய்கை முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதால், பயிர்களை நோய் பீடைகள் அணுகாது. இதேபோல் மண் மூலம் பரவும் நோய்களும் ஏற்படாது. எனவே பூச்சி நாசினிகள், நோய்க்கிருமிகள் இல்லாத விளை பொருட்களை மக்கள் நுகர்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

இது மட்டுமன்றி இவ் ஆளுகையில்லங்களில் சூழல் முகாமைத்துவம் பேணப்படுவதால் பருவகாலங்களில் மட்டுமன்றி, வருடம் பூராகவும் விவசாய விளை பொருட்களைப் பெறக் கூடிய நிலையும் ஏற்படும். இதே போல் பருவ கால சீர் கேடுகளான புயல், வெள்ளம், வறட்சி, காலம் தவறிய மழைப் பொழிவு போன்றவற்றாலும் பயிர்கள் பாதிப்படைய மாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் நேயப் பயிர்ச் செய்கைத் திட்டம்

எதிர் காலத்தில் இவ் பயிர்ச் செய்கை இல்லங்களுக்குத் தேவையான ஒளி, காற்றோட்டம் என்பவற்றை செயற்கையாக வழங்குவதற்குத் தேவையான மின்சாரம் சூரிய ஒளிப் பலகைகளையும் பயன்படுத்தியும், இங்கு பயிர் செய்து எஞ்சும் பயிர் மீதிகள், கழிவுகள் என்பவற்றை எரித்து அனல் மின்சாரம் மூலமும் பெறும் வாய்ப்புக்களும் ஏற்படும். மேலும் நகர்ப்புறத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரானது சுத்திகரிக்கப்பட்டு இத் தாவரங்களிற்கான நீர்த் தேவையை ஈடு செய்யவும் பயன் படுத்தப்படும்.

மக்கள் மத்தியில் பிரபல்யப் படுத்தல்

தற்போது மண்ணின்றிய பயிர்ச் செய்கை முறைகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் முகமாக எமது பாடசாலைக் கலைத் திட்டத்தில் அப் பயிர்ச் செய்கை முறைகள் தொடர்பான அடிப்படையை புகுத்தியுள்ளனர். இதன்படி இப் பயிர்ச் செய்யை முறையைப் பின்பற்ற ஆர்வமாக உள்ளவர்கள் தரம் 9 செயன் முறைத் தொழில் நுட்பத்திறன் மற்றும், தரம் 11 விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும் போன்ற அரச இலவச பாடநூல்களில் இருந்து தகவல்களை பெற்றுக் கொள்ள முடியம்.

வலிகாமம் மற்றும் தென்மராட்சி பிரதேச பாடசாலைகள் பலவற்றில் இப் பயிர்ச் செய்கை முறை சிறிய அளவில் பரீட்ச்சார்த்தமாக செய்து பார்க்கப்பட்டு வெற்றியும் தந்துள்ளது.

உள்ளரங்க அலங்காரத் தாவர வளர்ப்பு

வீடுகளின் உள்ளே மண் நிரப்பப்பட்ட சாடிகளில் தாவரங்களை வளர்க்கும் போது அவற்றின் நீர்த் தேவையை ஈடு செய்ய நீர் வழங்க வேண்டிய தேவை உண்டு. இதனால் பொதுவாக இவ் இடர்பாடுகளை கருத்திற் கொண்டு வீடுகளில் வரவேற்பறையில் உள்ளரங்க முறையில் இயற்கைத் தாவரங்கள் வளர்க்காது செயற்கை செடிகளை வளர்ப்பதுண்டு. ஆனால் இன்று குறித்த வளர்ப் பூடகம் நிரப்பப்பட்ட சாடிகளில் தாவரம் வளர்ப்பதால் நீர் வழங்க வேண்டிய தேவையில்லை. இரண்டு, மூன்று மாதத்திற்கொரு முறை நீர் வழங்கினால் போதுமானது எனவே வீடுகளில் உள்ளரங்க முறையில் இயற்கையான தாவரம் வளர்த்து வீட்டை அலங்கரிக்கவும் இத் தொழில் நுட்பம் வாய்ப்பாக அமைகிறது.

இன்றைய இளைஞர்களின் ஆதங்கத்திற்கு முடிவு

இன்றைய இளைஞர்கள் மண்ணில் இறங்கி வேலை செய்வதையும், மண் வெட்டியை கையால் பிடிப்பதையும், கேவலமாக எண்ணுகின்றனர். இதனால் ஆயிரமாயிரம் இளைஞர்கள் படித்து விட்டு வேலையில்லாப் பட்டாளத்தில் சேருகின்றனர். எனவே இவர்கள் எதிர் காலத்தில் ஏர் பூட்டாது, மண்வெட்டி பிடிக்காது, நடக்கும் இவ் வேளாண்மையில் தங்களை இணைத்துக் கொள்ளும் வாய்ப்புமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கக் கதை

ம.பரமகாந்தன்
உடையார்கட்டு

தண்ணீரூற்று எனும் இடத்தில் தாசன், வாசன் எனும் அண்ணணும் தம்பியும் வாழ்ந்து வந்தனர். இருவருமே பலே கில்லாடிகள். அவர் கள் செய்கின்ற குழப்படிகளை எழுத்தில் எழுத இயலாது. அவ்வளவு குழப்படி அவர்களின் தந்தையார் பற்றி தெரியாது. தாய் தான் கஸ்ரப்பட்டு வளர்த்து வருகின்றாள். பள்ளிக் கூடத்தில் இருந்து தினமும் ஒவ்வொரு குழப்படிக்காகத் தாய் அழைக்கப்பட்டு பிள்ளைகளைத் திருத்த முடியாத வர்கள் என்னத்திற்கு தான் பிள்ளைகளைப் பெறுகின் றீர்களோ? என அதிபரால் பேச்சு கேட்டு வீடு திரும்புகின்ற நிலையே இருந்தது.

தாய் எவ்வளவு முயன்றும் அவர் களை ஒன்றுமே செய்ய முடிய வில்லை. இன் நிலையில் தான் கடந்த மார்கழி மாதம் வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆல யத்தை அண்டிய சூழலில் ஓர் சாமி யார் வந்து இருப்பதை அறிந்து அவரிடம் சென்று தனது மகன்மார்களின் செய்கைகளைப் பற்றி கூறி கவலைப்பட்டுக் கொண்டாள். சுவாமியாரும் "கவலைப்படாதே பாடசாலை விடுமுறை என்றபடியால் அவர்களை அழைத்து நான் உபதேசம் பண்ணுகின்றேன் நீ இரண்டு பேரையும் ஒரே தடவையில் அனுப்பாமல் ஒவ்வொருத்தராக 15 நாளைக்கு அனுப்பு" என்றார்.

தாய் எவ்வளவு கெஞ்சியும் இருவரும் சாமியாரிடம் செல்ல மறுத்து விட்டனர். பின்னர் அண்ணனான தாசன் தம்பி வாசனைக் கட்டுப்படுத்தி நீ முதல் 15 நாள் போய் சாமியாருடன் இரு பின்னர் நான் கட்டாயம் வருவேன் எனக் கூறிச் சாமியாரிடம் அனுப்பி வைத்தான்.

சாமியாரிடம் வாசன் சென்ற போது சாமியார் தியானத்தில் மூழ்கி இருந்தார். வாசனும் பயபக்தியுடன் அவருக்கு முன்னால் கைகளை கட்டி அமைதியாக உட்கார்ந்து இருந்தான். சிறிது நேரம் சென்ற பின்னர் சாமியார் மெதுவாக கண்களை திறந்து வாசன் அமைதியாக இருப்பதைக் கண்டு மெதுவாகப் புன் முறுவல் பூத்தார். உடனே வாசனும் தன்னை அம்மா இங்கு வரச் சொன்ன விபரத்தைக் கூறி பவ்வியமாக உட்கார்ந்து இருந்தான். சுவாமியாரும் "குழந்தாய் கடவுள் எங்கே இருக்கின்றார்" என்றார். உடனே வாசன் திகைப்படைந்தவனாய்த் தலையை குனிந்தவாறு இருந்தான். சிறிது நேரம் கழித்து மீண்டும் சாமியார் "தம்பி கடவுள் எங்கே இருக்கின்றார் என்று சொல்லு" என்றார். சற்று தொனியைக் கூட்டி வாசனுக்கு வியர்க்க தொடங்கியது சாமியாரைப் பார்க்க பயமாக இருந்தது என்ன செய்வது என்று தெரியாமல் தலை குனிந்து இருந்தான். இன் நிலையில் இவனின் மௌனம் சாமியாரை மேலும் கோபம் கொள்ளச் செய்தது. மீண்டும் சாமியார் "டேய் தம்பி கடவுள் எங்கே இருக்கின்றார் என்று சொல்லடா" என்று கடும் தொனியில் கேட்டு கோபம் காரணமாக கண்களை மூடிக் கொண்டார். வாசனால் பயத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை சுற்றும் முற்றும் பார்த்தான் யாருமே இல்லை ஓரே தாவாக தாவி கிறவல் பாதையால் புழுதி பறக்க விரைவாக ஓடத் தொடங்கினான். இடை நடுவில் தாசன் தம்பியை மறித்து "என்னடா தம்பி ஏன் இவ்வளவு வேகமாய் ஓடி வாறாய் என்ன நடந்தது என்றான்"? வாசனும் அண்ணா நாம் மோசம் போய் விட்டோம் எம்மைப் பற்றி யாரோ சாமியாரிடம் இல்லாதது பொல்லாதது எல்லாம் கோள் மூட்டி விட்டினம் போல இருக்கு அந்த சாமியார் எங்களை திருடனாகப் பார்க்கின்றார். "யாரோ கடவுளாம் அவரை காணவில்லையாம் நாம் தான் எடுத்து விட்டதாக கருதி "கடவுள் எங்கை இருக்கின்றார் சொல்லு? கடவுள் எங்கை இருக்கின்றார் சொல்லு என கேட்கின்றார்" அது தான் நான் தெரியாமல் ஓடி வந்து விட்டேன் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்க, உரோம, எகிப்திய வரலாறுகளின் மாற்றத்திற்கு காரணமான அழகு சாம்ராச்சியம் கிளியோபாட்ராவின் காலம் கி.மு.69-லிருந்து 30 வரை என்று வரலாற்றுப் புத்தகங்கள் சொல்லுகின்றன. எகிப்தை ஆண்ட பன்னிரெண்டாம் டாலமி என்கிற மன்னனுக்கும் இஸிஸ் என்கிற அவனது ஒரு அரசிக்கும் பிறந்தவள் கிளியோபாட்ரா. சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த கிளியோபாட்ராவுக்கு முன்னால் ஏழு கிளியோபாட்ராக்கள் இருந்திருக்கிறார்கள் என்பதால் இவள் பிறக்கும்போதே எட்டாம் கிளியோ பாட்ரா என்றே குறிப்பிடப்பட்டு வந்திருக்கிறாள். முந்தைய ஏழு பேர் பெறாத பேரையும், புகழையும் இவள் எப்படிப் பெற்றாள் என்றால் அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு என்கிறார்கள் எகிப்து சரித்திரவியலாளர்கள்.

முதலாவது இவளது புத்திசாலித்தனம். அடுத்த காரணம் அழகு. வெறும் முப்பத்தொன்பது வயசு வரைக்கும் தான் அவள் வாழ்ந்திருக்கிறாள். ரொம்பச் சின்ன வயசிலேயே அரசியானவள் என்றாலும் ராஜாங்கக் காரியங்கள் தவிர பல்வேறு துறைகளில் அவளுக்குப் பெரிய ஆர்வங்கள் இருந்திருக்கின்றன.

. பாலில் குளிப்பாள்.. கண்களில் பல வண்ண மைகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரம் செய்துகொள்வாள். உடல் மினுமினுப் புக்காக முத்துக்களை வினிகரில் கரைத்து அருந்து வாள். என பல கதைகள் அவளை பற்றி உலவுகின்றன. அவள் பேரழகி மட்டுமல்ல ஜூலியஸ் சீசர், மார்க் ஆன்டனி போன்ற மாவீரர்களின் காதல் மனைவி யாகவும் இருந்தாள். கிரேக்கம், ரோம், எகிப்து என பல நாடுகளின் வரலாறே அவளால் மாறியது. போராட்டங்களும் மர்மங்களும் நிரம்பியவளது வரலாற்றை இன்றும் பல மேற்கத்திய பல்கலைக்க ழகங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன.

வசீகரம் இளமை புத்திக்கூர்மை, தேசப்பற்று நினைத்ததை சாதிக்கும் உறுதி ,இவைதான் கிளியோபாட்ராவின் வெற்றி ரகசியம். 11 மொழிகள் சரளமாக பேசுவாள். பேச்சாற் றலும் நிறைந்தவள். அவளது பேச்சுக்கு யாரும் மறு பேச்சு பேசியதில்லை.

14 வயதாகும்போதே தந்தையுடன் சேர்ந்து ஆட்சியை பகிர்ந்துகொண் டாள். தந்தை ,இறந்த பின் 18வது வயதில் அரசியானாள். எகிப்து அரச வழக்கப்படி அரசி மட்டும் தனியாக ஆட்சி நடத்தமுடியாது. இதனால் அந்நாட்டு வழக்கப்படி தனது தம்பி 13வது தாலமியை திருமணம் செய்து கொண்டாள்.எகிப்தில் பெரும் படை கிடையாது. நைல் நதி தீரம் என்பதால் செல்வத்துக்கு பஞ்சமில்லை இதனால் அண்டைநாடுகள் எகிப்து மேல் ஒரு கண்ணாகவே இருந்தன.

அழகு சாம்ராச்சியம்

கிளியோபாட்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்தையும் தனது ஆட்சியையும் பாது காக்க கிளியோபாட்ரா எடுத்த முடிவு யாரும் எதிர்பாராதது. அப்போது வலிமையுடன் இருந்த ரோமப்பேரரசர் ஜூலியஸ் சீசரை காதலிக்க முடிவு செய்தாள். முதல் சந்திப்பி லேயே ஜூலியஸ் சீசரை தன் காதல் வலையில் வீழ்த்தினாள். அப்போது கிளி யோபாட்ராவுக்கு 21 வயது, சீசருக்கு 54வயது



கிளியோபாட்ராவின் வளர்ச்சி அநேகம் பேருக்கு பொறாமையை அளித்தது. அவள் சகோதரனுடைய ஆலோசகர்களின் சூழ்ச்சி யால், கிளியோபாட்ரா ஆட்சியை இழந் தாள். அண்டை நாட்டில் தஞ்சமடைந்தாள். அப்போதுதான் அப்பெரும் திருப்பம் நிகழ்ந் தது. ரோமானிய மாவீரன் ஜூலியஸ் சீஸர் அப்போது, எகிப்த்துக்கு வர நேர்ந்தது. அவனது ஆதரவுடன், ஆட்சியை மீண்டும் கைப்பற்ற முடியும் என எண்ணிய கிளியோ பாட்ரா, அவனைச் சந்திக்க முடிவு செய் தாள். பகிரங்கமாக, எகிப்துக்குள் நுழைந் தால் எதிரிகளால் அவளது உயிருக்கே ஆபத்து பிறகு சீஸரை சந்திப்பது எப்படி? ஜூலியஸ் சீஸருக்கு அளிக்கப்பட்ட பல பரிசுப் பொருட்களில், சுருட்டப்பட்டிருந்த, ஒரு அழகிய கம்பளமும் இருந்தது. அவனுக்கு எதிரில் மெதுவாக உருட்டி விரிக்கப்பட்ட, அந்தக் கம்பளத்திலிருந்து பளீரென வெளிப்பட்டாள் கவர்ச்சிக் கன்னி கிளியோபாட்ரா. கண்டதும் அவள் மேல் காதல் வசப்பட்டான் மாவீரன். தன் காதலுக்காகவும், காதலிக்காகவும் எதையும் செய்யத் தயாராக இருந்த அவன், தனது படை பலத்தால் எகிப்தை வென்றான். அதை காதலின் காணிக்கையாக அவள் காலடியில் சமர்ப்பித்தான். காதல் மயக்கத்தில் பறந்தது காலம். ரோமானிய வீரனும் எகிப்த்திய அரசியும், அழகிய நைல் நதியில் கவிதைகள் பாடி, தோணிகள் ஓட்டி மகிழ்ந்தனர். காதலின் பரிசாக ஒரு மகனையும் அவனுக்கு ஈன்றெடுத்தாள் கிளியோபாட்ரா. அந்தக் குழந்தைக்கு "டாலமி சீசர்" என்று இரண்டு கணவர்களின் பேரையும் சேர்த்து வைத்து, சீராட்டி வளர்க்க ஆரம்பித்தாள்.அந்தக் குழந்தை சுகப்பிரசவமாக அல்லாமல் கிளியோபாட்ராவின் வயிற்றைக் கீறி, சீசராலேயே வெளியே எடுக்கப்பட்டது. முதன் முதலில் ஆபரேஷன் மூலம் பிறந்த குழந்தை அதுதான் என்பதாலும், அதைச் செய்தது சீசர்தான் என்பதாலும்தான் இன்றைக்கு வரை மருத்துவத்துறை, ஆபரேஷன் மூலம் பிரசவம் பார்ப்பதை சிசேரியன் என்று அழைக்கிறது! மகனுடன் ரோமாபுரியில் கால் பதித்த கிளியோபாட்ராவை, ஒரு தேவைதையாக வரவேற்றான் சீஸர். ஊர்வலமாக அழைத்துச் சென்று மக்களுக்கு அறிமுகப்படுத் தினான். அவளது சிலையையும் நிறுவி அவளை கௌரவித்தான். ஆனால் சீஸரின் அதிகாரத்தையும், கிளியோபாட்ராவை ரோமாபுரி மஹாராணியாக அமர்த்தியதையும், பொறுக்காத சதிகாரர்கள், கி.மு.44 ,ல் சீஸரை வஞ்சித்துக் கொன்றனர். துடித்துப் போன கிளியோபாட்ரா குழந்தையுடன் தன் நாட்டிற்கு தப்பி வந்து சேர்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் மாற்றங்கள் பல அரங்கேறின. ரோமானிய சாம்ராஜ்யத்தில், அக்டேவியன் என்பவனும், மார்க் ஆன்டனி என்பவனும், வெவ்வேறு பகுதிகளை ஆளத் தொடங்கினர். கி.மு. 42 ,ல் அரசியல் காரணங்களுக்காக, எகிப்த்துக்கு வந்த மார்க் ஆன்டனி கிளியோபாட்ராவை சந்தித்தான். அவள் மீது மீளாக் காதல் கொண்டான். தன் காதலை அவளிடம் சேர்ப்பிக்கத் தவித்தான். தன் கணவனை இழந்த துக்கத்தில், உயிர் சுமந்த உடலாக இருந்த கிளியோபாட்ராவிற்கு, அவனுடைய அறிமுகம் ரணமாற்றும் மருந்தாக இருந்தது. வார்த்தைகள் வளர்ந்து, நட்பானது. நட்பின் கரிசனம் அன்பு சேர்த்தது. அன்பு முதிர்ந்து காதலானது. வாழ்வில் மீண்டும் வசந்தம் துளிர்த்தது. இருவரும் இணைந்து தனித்ததோர் உலகம் படைத்தனர். காதல் கீதம் பாடி சிறகடித்துப் பறந்தனர். ரோமானிய மன்னன் ஆன்டனியின் உலகமே தலைகீழாக மாறிப் போனது. எகிப்தே அவனது தேசமானது. கிளியோபாட்ராவே அவனது உலகமானாள். ஆன்டனி ரோமாபுரியை மறந்தாலும், அந்நாடும், அவன் நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்த பல சக்திகளும், அவனுக்கு எதிராகக் கிளம்பத் தொடங்கின. தாய் நாட்டைத் துறந்து, வேற்று நாட்டு அரசியுடன் கூடிக் குலாவிய ஆன்டனிக்கு எதிராக, மக்களைத் தூண்டி விடுவது அக்டேவியனுக்கு ஒன்றும் பெரிய காரியமாக இருக்கவில்லை. ரோமானியர்கள் எகிப்து மீது போர் தொடுத்தார்கள். ஆன்டனி, கிளியோபாட்ராவின் கடற்படைக்கு தலைமை தாங்கி, ரோமானிய கடற்படையை எதிர்த்துச் சென்றான். கடல் போர் துவங்கியது. ஆன்டனி வீராவேசமாகத் தான் போரிட்டான். ஆயினும், மாபெரும் ரோமானியக் கடற்படைக்கு எதிராக அவனது கரம் தாழ்ந்தது. அவனது படை தோல்வியை நோக்கி முன்னேறியது. அந்தக் கெட்ட செய்தி எகிப்தை அடைந்தது. தோல்வி நெருங்குவதை உணர்ந்த கிளியோபாட்ரா தனக்காகவும், காதல் நாயகனுக்காகவும் கல்லறை ஒன்றை அமைத்தாள். அதில் குடி புகுந்தாள். அங்கே கடலில் அடுத்தடுத்து தோல்விகளால், மனம் வெதும்பி கிடந்தான் ஆன்டனி. அந்த தருணத்தில் கிளியோபாட்ரா மரணமடைந்து விட்டாள் என்ற தவறான செய்தி அவனை சென்றடைந்தது. ஐயோ!! நான் உயிர் வாழ இருந்த ஒரே காரணமும் முடிந்தது., அன்பே இதோ நானும் வந்தேன் உன்னுடன்!! என்று கதறிய ஆன்டனி தன் வாளை வயிற்றில் பாய்ச்சிக் கொண்டு மயங்கி விழுந்தான். அரசியின் உதவியாளர்கள் அவனை எடுத்துக் கொண்டு போய், கிளியோபாட்ராவிடம் சேர்த்தனர். மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த காதலனைப் பார்த்துக் கதறினாள் அவள். குற்றுயிராய் இருந்த அவன், கலங்காதே!! நம் காதலை நினைவு கொள்!! நம் காதல் வாழும் என்று கூறி அவளது கரங்களில் உயிர் துறந்தான். நேர்ந்த பேரிழப்புக்கு துக்கப்படக் கூடத்திராணி இல்லை அவளிடம். எகிப்திய சாம்ராஜ்யத்தின், தலைநகர் அலெக்ஸான்ட்ரியாவில், ரோமானியப் படைகள் சூழ்ந்து கொண்டிருந்தன. ரோமானியர்களின் ஒரே நோக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்து ஒன்பதே வயதான எழிலரசி, எகிப்திய பேரரசி கிளியோபாட்ராவை உயிருடன் பிடிப்பதுதான். அவளை சங்கிலிகளால் பிணைத்து, ரோமாபுரி வீதிகளில் இழுத்துச் சென்று, ரோமானியர்களே பாருங்கள்!! பேரழகி கிளியோபாட்ரா இனி நம் அடிமை!! நமக்கு தொண்டு செய்து வாழ்வதுதான் அவளது ஒரே கடமை என்று மக்களிடம் அவளைக் காட்சிப் பொருளாக்கிக் காட்ட அவர்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் கிளியோபாட்ராவோ ஓர் அரசனுக்குரிய அனைத்து மரியாதைகளுடனும், தன் அன்புக் காதலனை கல்லறையில் இட்டாள். பெரும் காதலுடன் வாழ்ந்த அவள், அப்போது விரும்பியதெல்லாம், மானத்துடன் இறப்பதையே!! எதிரிகளின் கண்களில் மண் தூவி, கொடும் விஷத்தால், மரணத்தை தழுவினால் காதலர்கள் மடிந்திருக்கலாம், அவர்களது மேனி , இன்று மண்ணோடு மண்ணாகியிருக்கலாம். ஆனால், ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்த பின்னும், இன்றும் அவர்கள் நினைவு கொள்ளப்படுகிறார்கள்.

ஹி ஹி இதுவும் ரொம்படி இருக்கு



MSC படிச்ச ஒருத்தன்
கிராமத்துக்கு போறான்..,

அங்கே ஒரு செக்கு மாடு மட்டும்
தனியா செக்கு சுத்திட்டு இருந்தது..

அவனுக்கு ஆச்சரியமா இருந்தது..,

பக்கத்தில ஒரு குடிசைக்குள்ள ஒரு
விவசாயி சாப்பிட்டுக் கொண்டு
இருந்தாரு.. அவர்கிட்ட கேட்டான்...

" மாடு மட்டும் தனியா செக்கு
சுத்திட்டு இருக்கே..? "

" அது பழகின மாடு தம்பி.., அதுவே சுத்திக்கும்..! "

" நீங்க உள்ளே வந்த உடனே அது சுத்துகிறத நிறுத்திட்டா...!
எப்படி கண்டுபிடிப்பீங்க..? "

" அது கழுத்தில ஒரு சலங்கை இருக்கு தம்பி.., சுத்துகிறதை நிறுத்திட்டா
அந்த சலங்கை சத்தம் வராது..அதை வெச்சி கண்டுபிடிச்சிடுவேன்.. "

" அது சுத்துகிறதை நிறுத்திட்டு., ஒரே இடத்துல நின்னு..,
தலைய மட்டும் ஆட்டினா..அப்ப எப்படி கண்டுபிடிப்பீங்க..? "

" இதுக்குதான் தம்பி., நான் என் மாட்டை
பெரிய படிப்பு எல்லாம் படிக்க அனுப்பலை..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கக் கதை

எல்.எம்.என்.ரிஸ்வின்
தோப்பூர்

பாசம்

திருமணம் முடிந்த பின் யாரைப் பார்க்கக் கூடாது என நிர்மலா நினைத்து இருந்தாளோ அவரை தற்போது பஸ்சில் பார்த்த அதிர்ச்சி, பரவசம் ஆகியவற்றால் நிலை குலைந்து தவிர்த்தாள். பார்க்கக் கூடாது என பார்வையைத் திசை திருப்ப முயன்ற போதும் மனம் பார்க்கச் சொல்லியது. மூன்று வயதேயான மகன் ஹரிஸ் ஏன் அம்மா கையெல்லாம் வேர்க்குது ஏன் ஒரு மாதிரி இருக்கின்றாய் என மடியில் இருந்தவாறு நச்சரித்தான். நிர்மலா நிமிர்ந்து பார்த்தபோது அவரின் பார்வை தன்னையும் தன் மகன் ஹரிசையும் விழுங்கி விடுவது போல பார்த்துக் கொண்டிருப்பதை அறிந்து சங்கோஜப்பட்டாள்.

மனதில் கடவுளை நினைத்து "கடவுளே இது என்ன சோதனை" இவ்வளவு காலமும் பார்க்காமல் இருந்து விட்டு இன்று ஏன் பார்க்கும் படி செய்கின்றாய் "என மனதிற்குள்" மன்றாடினாள். தனது இருக்கையில் இருந்து தூர விலத்தி நின்ற அந் நபர் திடீரென எழுந்து தன் பக்கம் நோக்கி வருவதைக் கண்டு திடுக்கிட்டாள். என்ன செய்வது என அறியாமல் திகைத்தாள். தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் ஹரிசை இறுக்கி அணைத்தாள். ஹரிசோ "ஐயோ அம்மா நோகுது" என்றான். நெருங்கி வந்த அந்த நபர் நிர்மலாவின் மடியில் இருந்த ஹரிசிடம் குனிந்து "குட்டிக்கு என்ன பெயர்" என கேட்டார் ஹரீசும் மழலை மொழியில் "ஹரிஸ்" என்றான். உடனே முகம் மலர்ந்த அவர் நல்ல பெயர் என கூறி தனது கழுத்தில் இருந்த சங்கிலியை கழற்றி ஹரியின் கழுத்தில் போட்டு விட்டு "எனது பெயர் என்ன என்று தெரியுமா என கேட்டார்" ஹரிஸ் விழிக்க "ஹரிகிருஸ்ணா" என்றான்.

இது வரை தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருந்த நிர்மலா திடீரென அவரின் கால்களில் விழுந்து "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா" என மன்றாடினாள். அவரும் நிர்மலாவை தூக்கி நிறுத்தி எனது சொல்லை மீறி காதலித்து திருமணம் செய்ததால் கோபம்தான், ஆனாலும் உனக்கு பெற்ற அம்மாவையும் அப்பாவையும் பார்க்க இவ்வளவு காலமாக மனசு வரலையா? எனக் கேட்டு மகளை உச்சி முகர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்சி என்ற இனப்பிரிவைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? இது இந்து , முஸ்லிம் போன்று ஒரு இனம்தான். இந்த பிரிவு சௌராஷ்டிர சமயம் என்றும் அழைக்கப்படுகிறது. ஈரானை பிறப்பிடமாக கொண்ட இந்த சமூகத்தினர் மகாராஷ்டிரா,குஜராத் பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றனர்.

கழுகுகளால் தாய்மை அறும் மனித உடலங்கள்

கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் இன்றைய ஈரானில் நிறுவப்பட்ட இச்சமயம் பாரசீகப் பேரரசின் அரசாங்க மதமாகப் பல நூற்றாண்டுகள் நிலைத்திருந்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாரசீகப் பேரரசின் மீதான இஸ்லாமிய அரசின் வெற்றியைத் தொடர்ந்து இம்மதம் வலுவிழக்கத் தொடங்கியது.

இம்மதத்தைப் பின்பற்றுவோர் பண்டைக் காலத்தில் மாஜிகள் என அழைக்கப்பட்டனர். அரபியில் இவர்களை அழைக்கப் பயன்படும் மஜூசி என்ற சொல் இன்றும் அதே பொருளில் வழங்கப்படுகிறது. இவர்களின் அறிஞர்களில் மூவரே இயேசு பிறந்தபோது அவரைக் காணச் சென்றனரெனக் கருதப்படுகிறது. இவர்களின் அறிஞர்கள் பல்வேறு வித்தைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள்.

இன்று சௌராஷ்டிர சமயத்தைப் பின்பற்றுவோர் பல்வேறு நாடுகளிலும் சிதறி வாழ்கின்றனர். ஈரான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற சில முஸ்லிம் நாடுகளில் மிகச் சிறியளவினராக இருக்கும் இவர்கள் தங்களுடைய மதத்தை முஸ்லிம்களிடம் மறைத்தவர்களாக இருக்கிறார்கள். இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கணிசமான தொகையினராகக் காணப்படும் இவர்கள் பார்சிகள் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

மேலே காணப்படுவது பார்சி மக்களின் சின்னமாகும். இவர்கள் தங்கள் உடன் பிறந்த சகோதரர், சகோதரிகளையே திருமணம் செய்துகொள்கின்றனர்.(வாய் வழிச் செய்தி) இதனால் பிறக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் பெரும்பாலும் உடல் மற்றும் மன நல குறைவுடன் பிறக்கின்றன. இந்த இனமானது இந்த காரணத்தினால் அழிந்து வரும் இனமாக கருதப்படுகிறது.(ரத்தன் டாட்டா இந்த இனத்தைச் சேர்ந்தவரே) இவர்கள் சமுதாயத்தில் மற்றொரு வினோத சம்பிரதாயம் கடைப் பிடிக்கபடுகிறது. இது சிலருக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆம்! அதாவது சொராஸ்டிர சமுதாயத்தில் இறந்த உடல் அசுத்தமானதாய்க் கருதப்ப டுகிறது. இறந்த உடலைப் புதைத்தால் அது மண்ணை யும் , எரித்தால் நெருப்பை யும் அசுத்தப்படுத்தி விடும் என கருதப்பட்டு .அத் தோடு இறந்தவர் இறுதி தானமாய்த் தனது உட லையும் பறவைகள் உண் ணத் தரும் நோக்கில் இறந்த வர்களின் உடல்கள் அமை தியின் கோபுரத்தில் (Tower of silence) கிடத்தப்படுகின் றன.

கழுகுகள் வந்து இறந்தவர் உடலை உண்டுத் தூய்மை செய்கின்றன. சொராஸ்டிர சமயத்தின் பிறப்பிட மான ஈரானில் இப் பழக்கம் 1970 ஆம் ஆண் டு முற் றும் தடை செய்யப்பட்டு அமைதியின் கோபு ரங் கள் இழுத் து மூடப்பட்டன.கணி சமான எண்ணிக்கை யிலான பார்சி மக் கள் வாழும் இந்தியா



வில் இப்பழக்கம் இன்னும் தொடர்கிறது. ஆனால் கால்நடைக ளில் டைக்ளோஃபீனாக் மருந்தைப் பயன்படுத்தி 99.9 விழுக்காடு இந்தியக் கழுகுகள் அழிந்து விட்ட தால் பார்சி மக்கள் இறந்த உடலைப் புதைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Reg No - NA/DS/842
Forest No - TD/174/V

அம்பாள் மரக்காலை

Ambal Timber Depot

இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகளி அம்மன் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்

தொ.பே - 021 222 0045
077 711 1147
077 889 4200

மீளாத்துயருடன்

எமது நண்பன் சிவபுரநாதன்
சுபாஷ்கரனின் அன்பு தாயார்

வேலணையைப் பிறப்பிடமாகவும்
கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும்
கொண்ட

அமரர்

இராசலட்சுமி சிவபுரநாதன்

— நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா வரும் அரபு நாட்டு ஷேக்குகளில் சிலர், தங்கள் காமவெறியைத் தணித்துத் கொள்ள இந்திய பெண்களைத் திருமணம்செய்து கொள்வதும் எல்லாம் முடிந்ததும் அந்த பெண்களை விவாகரத்து செய்வதுமான அதிர்ச்சிகரமான செய்தியை மக்களின் குரல் என்ற இணையம் அம்பலப்படுத்தியுள்ளது.

இந்தியாவில் ஒரு ஆங்கில மாலை நாளிதழின் பெண் நிருபர் கிராந்தி விபுதேயும் ஆண் நிருபர் பூபன் படேலும் ஒரு மாதத்திற்கும் மேலாக உளவு பார்த்து அரபு ஷேக்குகளின் காம லீலைகளை அம்பலப் படுத்தியுள்ளனர்.

அதாவது, இந்தியாவிற்கு சுற்றுலா விசாவில் வரும் அரபு நாட்டு ஆண்கள் சிலர், மும்பை அல்லது வட மாநில நகரங்களில் தரையிறங்கியதும் பெண் தேடும் படலத்தை தொடங்கி விடுகின்றனர். அதற்காகவே உள்ள சில புரோக்கர்கள் அரபு ஷேக்குகள் தங்கியிருக்கும் இடங்களுக்கு பெண்களை கூட்டிச் செல்கின்றனர்.

இவ்வாறே தங்களுக்குப் பிடித்தமான பெண்களை அரபு ஷேக்குகள் தெரிவு செய்கின்றனர். எல்லாம் மத முறைப்படியே செய்ய வேண்டும் என விரும்பும் ஷேக், அந்த பெண்ணுடன் திருமணம் செய்து கொள்கின்றனர்.

திருமணத்தை முஸ்லிம் மதகுரு நடத்தி வைக்கிறார். அதற்கு முன்பு ரூ.15 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை பணம் பேசப்பட்டு பெண்ணுக்கு கைமாறி விடுகிறது. மேலும் எத்தனை நாட்களுக்கு ஷேக்கிற்கு மனைவியாக இருக்க வேண்டும் என்பதும் முடிவு செய்யப்பட்ட பின், ஷேக்கின் மனைவியாக இந்திய பெண் மாறுகிறாள்.

அந்த பெண்ணுடன் இந்தியாவில் உள்ள மத வழிபாட்டு தலங்கள், முக்கிய சுற்றுலா இடங்களுக்கு செல்லும் ஷேக், அந்த பெண்ணைத் தன் காம இச்சைக்கு விருப்பம் போல பயன்படுத்துகிறார். தன் விசா காலம் ஒரு வாரத்திலோ அல்லது 10 நாட்களிலோ முடியும்போது திருமணம் செய்து வைத்த மதகுருவிடம் வந்து விவாகரத்தும் செய்து விடுகிறார்.

விவாகரத்தும் சில வினாடிகளில் முடிந்து விடுகிறது. குறிப்பிட்ட காலம் மட்டும் அரபு ஷேக்கின் மனைவியாக வாழ்ந்த அந்த பெண் கசக்கி வீசப்படுகிறாள். இதில் கொடுமை என்னவென்றால் அரபு ஷேக்கிடம் சிக்கும் பெண்ணுக்கு அவள் பெறும் பணத்தில் கொஞ்சமே கிடைக்கிறது.

50 சதவீத பணத்தைத் திருமணம் மற்றும் விவாகரத்தைச் செய்து வைக்கும் மதகுரு எடுத்து கொள்கிறார். மீதமுள்ளதைப் பெண்ணும் அவளை, ஏற்பாடு செய்யும் ஏஜண்டுகளும் பகிர்ந்து கொள்கின்றனர். இந்த கொடுமை மும்பை, ஐதராபாத் நகரங்களில் வெகு சாதாரணமாக நடக்கிறது குறிப்பிடத்தக்கது.

ஷேக்குகளின் சேட்டைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விடுதலைப் போராட்டத்தின் வலி

உண்மையாக விடுதலையை நேசிப்பவர்களால் அந்த வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியும். முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கைக்கு அனுப்பிவைத்த அமைதிப் படையில் பகத்சிங்கின் தம்பி ரன்பீர் சிங்கின் மகன் யோணன் சிங்கும் இடம் பெற்றிருந்தார்.

அமைதிப் படை இந்தியா திரும்பிய பிறகு யோணன் சிங்குக்கு வீர விருது கொடுப்பதாக இந்திய அரசு அறிவித்தது. இந்தச் செய்தியைத் தன் அப்பாவிடம் சொன்ன யோணன், விழாவுக்கு அவரையும் அழைத்தார்.

ஆனால் ரன்பீர் சிங்கோ, "ஓர் இன விடுதலையை அடக்கியதற்காகக் கொடுக்கப்படும் விருதை வீர விருதாகக் கருத முடியாது. அப்படி ஒரு விருதை வாங்கிக்கொண்டு இந்த வீட்டுக்குள் நுழைய வேண்டாம்" என்றார். யோணன் சிங் அந்த விருதைப் புறக்கணித்தார். ஒரு விடுதலைப் போராட்டத்தின் வலி என்ன என்பதை பகத்சிங்கின் பக்கத்தில் இருந்து பார்த்ததால்தான் ரன்பீர் சிங்கால் அப்படிச் சொல்ல முடிந்தது...!

"நான் இளைஞனாக இருந்த போது பத்து காரியங்கள் செய்தால் அதில் ஒன்பது தோல்வி அடைவதைப் பார்த்தேன். என்னுடைய வாழ்க்கையில் தோல்வி அடைவதை நான் விரும்ப வில்லை. ஒன்பது தடவை வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தபோது, எனக்கு ஓர் உண்மை பளிச் சென்று விளங்கியது. தொண்ணூறு முறை முயன்றால் ஒன்பது தடவை வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. ஆகவே முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேன்"" இப்படிச் சொன்னவர் பெர்னாட்ஷா. அலெக்சாண்டர் ஒரு முறை படையெடுப்பின் போது, பதினோரு நாளில் 3300 பர்லாங் தூரம் தன படைகளை அழைத்துச் சென்றிட வீரர்கள் அனைவரும் சோர்வடைந்தனர். அதிலும் குடிக்க சிறிதும் தண்ணீரே இல்லாத சூழ்நிலையில் மிகவும் களைப்புற்று மேற்க்கொண்டு செல்ல விருப்பமில்லாதிருந்தனர். அலெக்சாண்டருக்கு அவர்களை எப்படி சமாதானப்படுத்திக் கூட்டிச் செல்வது என்று யோசனை. அப்போது அவருடைய மெய்க்காப்பாளன் ஒருவன் எங்கிருந்தோ ஒரு குடுவையில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். அவருக்கும் தாகம் அதிகம் இருந்ததால் குடிக்கலாம் என்று எண்ணியபோது சுற்றிலுமிருந்த வீரர்களின் முகங்களைப் பார்த்தார். அவர்கள் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருந்தனர். உடனே அவர் நீரைக் குடிக்காது திரும்பக் கொடுத்தார். எல்லோரும் வியப்புடன் அவரை பார்க்கையில் அவர் சொன்னார், ""நான் மட்டும் நீரை அருந்தினால் மற்றவர்கள் மனமுடைந்து விடுவர். மேலும் அது நியாயமுமில்லை. ""அவருடைய பெருந்தன்மையைக் கவனித்த வீரர்கள் உடனடியாக தங்கள் களைப்பையும் தாகத்தையும் பொருட்படுத்தாது, குதிரைகளில் ஏறிப் புறப்பட்டனர். வெற்றிகள் வந்து குவிந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

New Ram Construction

THAYAN BUILDING MATERIALS SUPPLIERS

No.263 Navalar Road, Jaffna

Tel : 021 222 8103, Hot line : 077 634 1525

ESPN & CO

இ.ஸ்.பி நாகரத்தினம் சக நிறுவனம்

இல. 52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Tel: 021 222 3096, 021 222 7282

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

மும்மொழிகளிலும் சாரதி பயிற்சி அளிக்கப்படும்

கிருபா லேனர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)

இப்போது
சுன்னாகத்தில்

K.K.S வீதி,மதவடி முன்பாக
021 224 2022, 071 4546956,
0777 225292

வாகன பயிற்சிகள் சுன்னாக கிளையிலிருந்து ஆரம்பிக்கப்படும்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.

ஞாயிற்றுக் கிழமைகளில் மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்) புகைப்படம் என்பவற்றை பெற்றுக் கொள்ள ஒழுங்கு செய்து தரப்படும்.

அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகன பயிற்சி வழங்கப்படும்.

தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகன பயிற்சி வழங்கப்படும்

தவணை முறைக் கட்டணங்கள்.

வான் கார் முச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிள் லாண்ட்மாஸ்ரர் ரக்டர் பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப் பத்திரமும் பெற ஒழுங்குகள் செய்து தரப்படும்

செயன்முறைப்பயிற்சி சித்தியடைய தவறும் பட்சத்தில் இலவச தொடர்பயிற்சி வழங்கப்படும்

KIRUBA LEARNERS

(Govt. Approved A Grade Driving Training School)

தலைமைக் காரியாலயம்
இல.26 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353
021 492 3200

எமது கிளைகள்

கிளிநொச்சி 021 228 5505 / 0714546955			
A9 வீதி, சாவகச்சேரி.	நெல்லியடி	பருத்தித்துறை	விசுவமடு
021 492 3202	021 300 6550	021 4923201	021 320 1515
021 227 0700	0714546957	0714546958	0714546955

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org